ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6 மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ மார்கழி ௴ 19௳ (3—1—1932) | மலர் 36

பலமுள்ளவீரபுருடனாகை,

குமரனாகை, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மனமொத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையேன வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும், சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், காவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கலே முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

சுயமரியாதைச் சுடர்! முதல் இதழ் வெளிவந்துவிட்டது!

சுயராஜியம் யாருக்கு?

(முதற் பாகம்.)

தோழர், M. சிங்காரவேலு B. A., B. L.,

எழுதியது.

நமது "சுயமரியாதைச் சுடர்" என்னும் புத்தக வரிசையில் மேற்கண்ட புத்தகம் முதல் இதழாக வெளிவந்து விட்டது. இதில் அறிஞர் சிங்காரவேலு, வழக்கமாக வுள்ள தமது எளிய நடையில் மிக ஆணித்திரமாக, சமூகக்கொடுமை, ஜாதிக்கொடுமை, மதக்கொடுமை, அரசியல் கொடுமை பொருளாதாரக் கொடுமை, முதலியவற்றையும் காங்கிரசின் கள்ள நியாயம், தீண்டாமை யொழிப்பு, முதலிய பல விஷயங்களையும் நன்கு எடுத்துக்காட்டி யிருக்கின்றார்.

விலை அணா ஒன்று தான்.

தமிழ் நாடெங்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

தாராளமான நிபந்தனைகள்! ஏராளமான கமிஷன்!

விபரங்களுக்கு உடனே எழுதவும்.

விலாசம்:---

கற்பகம் கம்பெனி, (புத்தக இலாக்கா)
257, லிங்கசெட்டித் தெரு,
ஜி. டி. மதராஸ்.

ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவைகளைக் கொடுத்து நரம்புகளுக்குப் பலத்தைத் தரும். சிதக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொர்ப்பன ஸ்கலிதம் இவைகளைக் குணப்படுத்தும்.

1-நெ. ஒரு சேர்	ரூ. 4-0-0,	அரை சேர்	ரூ. 2-0-0.
கால் சேர்	ரூ. 1-0-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-8-0.
2-நெ. ஒரு சேர்	ரூ. 3-0-0,	அரை சேர்	ரூ. 1-8-0.
கால் சேர்	ரூ. 0-12-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-6-0.

T. A. ராமலிங்க முதலியார், ஷண்முகாநந்த வைத்தியசாலை.

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய் நாட்டு நண்பர்கள் கீழ்க்கண்ட எங்கள் கம்பெனிசோல் ஏஜண்டு அவர்களுக்கு எழுதி எல்லா விபரங்களும் தெரிந்து கொள்ளவும்.

S. S., F. M. S., J. B.,

மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வெள்ளைச்சாமி,

நெ. 616 டத்தோகிரமட் ரோடு, பினங்கு. S. S.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளிபாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேக வாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, இரைரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, சூதககட்டிகள், பக்க விலா இழுபபு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள். மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித ரோகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் [விரிக்கிர் பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும், 3 நேரம் நம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நான்பாலியதேஜசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

காந்தி பக்தியும் ராமபக்தியும் ஒன்றே.

சென்னை சுயமரியாதை மகாநாடு.

ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் விஜயம்.

பெண்களின் சுதந்தர ஊக்கம்.

வீரமான சொற்பொழிவுகள்.

நகர் முழுதும் சுயமரியாதை ஒலி.

எதிரிகளின் வாயடைப்பு.

வெற்றிகரமான முடிவு.

:0:

சென்ற நவம்பர் மாதத்திலேயே கூட்டுவதாயிருந்த சென்னை சுயமரியாதை மகாநாடு பல அசந்தர்ப்பங்களை முன்னிட்டு டிசம்பர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த விஷயத்தை வாசகர்கள் அறிவார்கள். அவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டதும் நமது விரோதிகள், அதிலும் முக்கியமாக சென்னையிலுள்ள தேசிய வீரர்களும், பார்ப்பன உத்தியோகஸ்தர்களும் இம்மகாநாடு நடைபெறுமலிருப்பதற்கு என்னென்ன சூழ்ச்சிகள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் இடைவிடாமல் செய்து கொண்டேயிருந்தார்கள். உதாரணமாக, சில பொதுக்கூட்டங்களில் "காந்தியைத் திட்டினால் திட்டு; பார்ப்பனரைத்திட்டாதே," என்று சிலரும் "பார்ப்பனரைத்திட்டினால் திட்டு; காங்கிரசையும் காந்தியையும் திட்டாதே," என்று சிலரும் கூச்சல் போட்டார்கள். இன்னும் இண்டு இடுக்குகளில் நின்று கொண்டு "காந்திக்கு ஜே! வந்தே மாதரம்!" என்று கூச்சல் போட்டுப் பார்த்தார்கள்.

இவ்வளவிற்கும் அஞ்சாமல் காந்தியின் புரட்டு, காங்கிரசின் புரட்டு முதலியவைகளை வெளிப்படுத்த கடற்கரைக் கூட்டங்களிலும் இன்னும் ஸ்ரீராமுலு பார்க், நேபியர் பார்க், சிவஞானம் பார்க், மயிலாப்பூர் கடைத்தெரு, வாதராஜபுரம் மைதானம், கொய்யாத்தோப்பு, ஒயிட்டட் ஹால், பெரம்பூர் மைதானம், பெரம்பூர் புத்த சங்கம் முதலிய பல பாகங்களிலும் இடைவிடாமல் பொதுக்கூட்டங்கள் போட்டுக் கொண்டேயிருந்தமையால் சென்னை வாசிகளிலேயே பலருக்கு சுயமரியாதை உணர்ச்சி பலமாகக்கிளம்பி விட்டது என்பதையறிந்து பார்ப்பனர்களும் அவர்களது தேசியக்கூலிகளும், வேறுபல சூழ்ச்சிகள் செய்தார்கள். போலீசுக்கு எழுதி சுயமரியாதைக்காரர்கள் சாதிச்சண்டையை உண்டாக்குகிறார்களென்றும், ரேடியோவிற்கு வருகிறவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறதென்றும், சமாதானக்குறைவுக்குக்காரணஸ்தர்களாக இருக்கிறார்களென்றும், ஒரு கட்டுகட்டிவிட்டு போலீசாரை ஏவி சுயமரியாதைத்தோழர்கள் சிலருக்கு C. I. D. போடும்படியான ஏற்பாடுகளைச்செய்தார்கள். போலீஸ் நிர்வாக உத்தியோகஸ்தர்களிடம் சென்று இக்கூட்டங்களை சென்னையில் அனுமதிக்கக்கூடாதென்று சொன்னார்கள். இவ்வளவும் செய்தும் சுயமரியாதைக்கூட்டங்களை நிறுத்த முடியவில்லையென்பதை யுணர்ந்துகொண்டு "ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதைக்காரர்களும் ஒன்றாகையால் சர்க்கார் இதில் தலையிட மாட்டேனென்கிறார்கள்" என்று ஒரே அடியாகச்சொல்லிவிட்டு திருப்தியடைந்துகொண்டுவிட்டார்கள். இதற்கிடையில் பொதுக்கூட்டங்கள் சம்மந்தமான செய்திகளை தேசியப்பத்திரிகைகள் என்று சொல்பவைகள் ஒருவரிகூட பிரசுரம் செய்யாமலேயிருந்தன. மகாநாட்டு நிகழ்ச்சிகள் கூட இப்படித்தான். திராவிடன் ஜஸ்டிஸ், தமிழ் நாடு தவிர மற்ற சென்னைப் பத்திரிகைகளெல்லாம் பார்ப்பனப்பத்திரிகைகள் என்பதையும், பார்ப்பனீயத்திற்கு வால்பிடித்தத்திரியும் பத்திரிகைகள் என்பதையும் வெளிப்படையாக நிரூபித்துவிட்டன.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க சில மூட்டைப் பூச்சிப்பத்திரிகைகள் "சுயமரியாதை மகாநாட்டை நடத்தவிடக்கூடாதென்றும்" "ஆஸ்திகர்களே! ஜாக்கிரதை" என்றும்பந்தோபஸ்துபண்ணிக்கொண்டிருந்தன. இன்னும் பலர் "இவர்களுடைய தலைவர்களாகிய ராமசாமியும், ராமநாதனும் அயல்நாடு போயிருக்கும் போது இவர்கள் எங்கே மகாநாடு நடத்தப்போகிறார்கள் பார்ப்போம்" என்று சொல்லி பயமுறுத்தினார்கள் இன்னுஞ்சிலர் 'தேசியமே உருவாயிருக்கும் சென்னையில் அதற்கு எதிரான சுயமரியாதை இயக்கம் பரவமுடியுமா'? என்று ஆர்ப்பரித்தார்கள். ஆனால் சென்னைவாசிகளின் ஊக்கத்தாலும் அவர்களுக்கிருக்கும் தீவிரசுயமரியாதை உணர்ச்சியாலும் மகாநாடு குறிப்பிட்டபடி டிசம்பர் 26, 27 சனி ஞாயிறுகளில் பச்சையப்பன் கல்லூரி ஹாலில் நடைபெற்றது.

மகாநாடு சம்மந்தமான ஜீவால் போஸ்டர்கள் ஆயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு சென்னை நகரில் பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன. ஆங்கிலத்திலும் தமிழிலும் சுயமரியாதைக்கொள்கைகளைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் சென்னை நகரில் டிராம்களிலும் பஸ்களிலும் வழங்கப்பட்டன. "Self-respect Conference" என்று துணியில் கொட்டைகளில் தைக்கப்பட்டு 40 அடி நீளத்திற்குக் கட்டப்பட்டிருந்தது. "Religion is the Opium of Life" (மதம் வாழ்க்கைக்கு அபின்) என்று துணியில் எழுதப்பட்டு வெகு பகிரங்கமாகத் தொங்கவிடப்பட்டிருந்தது. தோரணங்களும் இலைகளும் தூணுக்குத் தூண் கட்டப்பட்டிருந்தன. மண்டபத்திற்குள் சுயமரியாதை வாக்கியங்களைக்கொண்ட அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

சுயமரியாதை மகாநாடு சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாயிற்று. மகாநாட்டிற்குவந்திருந்தவர்களில் தோழர்கள் பார்த்தசாரதி, ராணிப்பேட்டை பாலசுப்பிரமணியம், சிங்காரவேலு B. A., B. L., புரொபசர் லட்சுமிநரசு B. A., C. D நாயகம், டிபுடிரிஜிஸ்ட்ரார், V. M. ராமசாமி முதலியார் M. L. C., N. சிவராஜ், B. A., B. L., M. L. C., T. S. ஆறுமுகம் B. A., B. L., "திராவிடன்" ஆசிரியர், T. A. V. நாதன் 'ஜஸ்டிஸ்' ஆசிரியர். C. R. நாராயணசாமி B. A., பாலசுப்பிரமணியம், புரொபசர் முத்தையா (B. A. Hons.,) K. V. அழகர்சாமி, 'குமரன்' ஆசிரியர் S. முருகப்பர், அ பொன்னம்பலனார், விசாலாட்சி-சுப்பையா, ஸ்ரீமதி மரகதவல்லி, S. V. லிங்கம், N B. காளியப்பன், திருச்சி விஸ்வநாதம், வாசுதேவன், T. D. கோபால், ஸ்ரீமதி குஞ்சிதம்-குருசாமி அருணகிரிசுந்தரி, ஸ்ரீமதி அச்சம்மாள், பங்காரு, ஜானகிபாய் சகோதரிகள், ஸ்ரீமதி லட்சுமி நரசு, ஸ்ரீமதி C. D. நாயகம், ஸ்ரீமதி காந்தம், சகுந்தலா, தர்மாம்பாள், கிரிஜாதேவி, 'தமிழன்' ஆசிரியர் அப்பாத்துரையார்-அவரது புதல்வி ஸ்ரீமதி அன்னபூரணி, V. P. S. மணியர், P. S தண்டபாணி, தக்கோலம் செல்லப்பன், அய்யாக்கண்ணு. முருகேசம், வித்வான் முனிசாமி, பண்டிதர் திருஞான சம்பந்தம், ரத்தினசாமி, M. முருகேசம் B. A உதவி ஆசிரியர் "ஜஸ்டிஸ்" வி. ராமசாமி, "ஆன

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

சென்னை சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர். தோழர்

வி. பார்த்தசாரதி

அவர்களின் தலைமைப்பிரசங்கம்.

26-12-31ல் நடைபெற்ற சென்னை சுயமரியாதை மகாநாட்டில் தலைமைவகித்த தோழர் வி. பார்த்தசாரதி அவர்களின் தலைமைப் பிரசங்கம் வருமாறு:—

சகோதரிகளே! சகோதரர்களே!

இன்று இம்மகாநாட்டிற்கு எனக்குத் தலைமை வகிக்கும்படியான சந்தர்ப்பமளித்ததற்காக நான் அதிக சந்தோஷப்படுவதோடு தங்களுக்கு எனது நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றியோ இவ்வியக்கம் செய்துள்ள வேலைகளைப் பற்றியோ குறிப்பிடுவதற்கு முன் இவ்வியக்கத்தைப்பற்றி பொதுவாகச்சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நமது தலைவர்.

இவ்வியக்கமானது 7 வருஷங்களுக்கு முன் ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதென்பது யாவரும் அறிவர். அதுமுதல் இதுவரையில் இவ்வியக்கத்திற்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. இவ்வியக்கத்தை ஆரம்பித்த தோழர் இதுவரையில் இவ்வியக்கம் காரணமாக என்னென்ன கஷ்டங்களுக்கு உட்பட்டிருக்கிறார் என்பதை அவருடன் இருந்தவர்களே அறியமுடியும். "உன்னைக் கொன்று விடுவேன்" என்றும், "சிரத்தானந்தருக்கு நேர்ந்த கதியே உனக்கும் நேரும்" என்றும், "உன் குடும்பத்தையே அடியோடு அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறேன்" என்றும் இன்னும், இம்மாதிரியான பயமுறுத்தல் கடிதங்கள் ஆயிரக்கணக்காய் வந்தன என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இதில் ரத்தத்தினால் கையெழுத்திடப்பட்டவை எத்தனையோ கடிதங்கள். இவ்வளவையும், சிறிது கூட பொருட்படுத்தாமல் இவ்வியக்கத்தை ஆதிமுதல தைரியமாகவும், உற்சாகத்தோடும் நடத்தி வருவதற்குக் காரணமாயிருந்த நமது ராமசாமியாரை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. சுருக்கமாகக் கூறவேண்டுமானால் புத்தருக்குப் பிறகு இந்தியாவில் மதம், சமூகம், புராணம் முதலிய துறைகளில் தலைகீழான புரட்சிகள் செய்து அதைப்பல்லாயிரக் கணக்கான மக்களுக்கிடையில் வேரூன்றச்செய்த பெருமை ஈ. வெ. ராமசாமியைத் தவிர வேறொருவருக்குமே இந்தியசரித்திரத்தில் கிடையாதென்பதை யார் மறுத்தாலும் சரித்திரக்காரர்கள் மறுக்கமுடியாதென்பதை உறுதியாகக்கூறுவேன். இவ்வளவு பெரிய எதிர்ப்புக்கிடையே ஒரு இயக்கத்தை நடத்தவேண்டுமென்றால் அவ்வியக்க கர்த்தாவுக்கு எவ்வளவு தன்னம்பிக்கையும், உறுதியும் விடாமுயற்சியும் இருக்கவேண்டுமென்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். ஒரு இயக்கத்திற்கு தலைவராகவோ, காரணஸ்தராகவோ இருப்பது சாமான்யமல்ல. அதுவும் இந்தியாவைப்போல் மூடநம்பிக்கையே உருவாகக்கொண்ட நம் நாட்டில் அவர்களுடைய வழக்கங்களுக்கு நேர்விரோதமான புரட்சியை உண்டாக்குவதென்றால் அது சாமான்யமல்ல. ஒருவன் "வந்தே மாதரம்" என்பதாலோ "பாரத மாதாவுக்கு ஜே!" என்பதாலோ ஒரு பெரிய தேசபக்தனாய் விடுகிறான். ஏனென்றால் "அன்னிய அரசாட்சி என்கிற ஒரு பெயரை பாமர மக்களிடம் சொல்லி அவ்வரசாட்சியின்மீது கோபப்படுத்துவது வெகு எளிதான காரியம். அதுவும் படித்த சர்க்காரோடு, ஒரு அமைப்புத்திட்டம் உள்ள ஒரு சர்க்காரோடு சண்டை போடுவதென்பது மிக எளிது. ஆனால் நமது சண்டையோ அறிவற்ற, மூடநம்பிக்கையில் அழுந்திக்கிடக்கின்ற, ஆயிரக் கணக்கான வருஷங்களாய் மதம், சாதி இவைகளுக்கு, அடிமையாயிருக்கின்ற, படிப்பே இல்லாத பாமர மக்களிடமாகும். ஆகவே மதம், சமூகம், முதலிவைகளில் சீர்திருத்தம் செய்யவேண்டியவர்கள் மதத்துரோகி, தேசத்துரோகி, நாஸ்திகன், புரட்சிக்காரன், பிராமணத்துவேஷி முதலிய பட்டங்களுக்குச்சிறிதும்பயப்படாமல் இருக்கவேண்டியவனாக ஆகிறான் என்பதை உங்களுக்கு வற்புறுத்துகிறேன். இதில் எந்த வேலை கஷ்டமானது, எது சுலபமானது, என்பதை உங்கள் யோசனைக்கே விட்டுவிடுகிறேன்.

எதிர்ப்புகள்.

இனி பொதுவாக நமது இயக்கத்திற்கு இதுவரையில்ஏற்பட்ட எதிர்ப்புகளைப்பற்றிசிலவார்த்தைகள் கூற விரும்புகிறேன். "ஞானசம்பந்தர் பிறந்து இந்நாஸ்திக இயக்கத்தை அழிக்கப்போகிறார் என்றும்" "சுயமரியாதை இயக்கத்தைவேரோடு அழிப்பதற்குகங்கணம்கட்டிக்கொண்டிருக்கிறேன்' என்றும் சபதமிட்டவர்கள் பலர்; ஆஸ்திக சங்கம் ஏற்படுத்திய அன்பர்கள் பலர். இவ்வளவுக்கும் ஆதரவுகள் கொடுத்துக்கொண்டு வந்த பத்திரிகைகள் பல. அவைகள் எல்லாம் இன்று என்ன கதி ஆயினவென்பதை நீங்களே அறிவீர்கள். சைவர்கள் ஒரு பக்கம் உறுமினார்கள். வைணவர்கள் ஒரு புறம் அலறினார்கள். கிறிஸ்துவர்கள் ஒரு பக்கம் பதறினார்கள். பிராமணர்கள் ஒரு பக்கம் துடித்தார்கள். முஸ்லீம்கள் ஒருபுறம் பயந்தார்கள். ஆனால் அவர்எல்லாம் இன்று நமது இயக்கத்தை நேர்மையான முறையில் எதிர்க்க முடியாதென்பதை அறிந்து கொண்டு நேர்மையற்ற முறையில் பிரவேசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி எங்களுக்கு சிறிதும் கவலையில்லை. எங்களுடைய சீர்திருத்த நெருப்புக்கு முன்பு அந்த தூசிகள் என்ன கதியாகும் என்பது எங்களுக்குத்தெரியும். அதுவுமல்லாமல் இவ்வியக்கத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந்த இயக்கத்தின் கொள்கைகளுக்காகவும் அக்கொள்கைகளை மக்களுக்குள் புகுத்தி மக்களிடத்தில நிரந்தர ஒற்றுமையை உண்டாக்க வேண்டும் என்ற முயற்சியிலும் தங்கள் உயிரை திரணமாக நினைத்திருக்கிறார்கள். என்பதைத்தங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

சென்னை நகரும் சுயமரியாதையும்

இனி சென்னை நகரில் சுயமரியாதை இயக்கம் பரவ வேண்டிய அத்யாவசியத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரமானது அறிவிலும் நாகரீகத்திலும் மேல் நாட்டு சாஸ்திரங்களிலும் மிகவும் மேம்பட்டது என்பதுவெளியூரார்களின் அபிப்பிராயம். ஆனால் இங்குதான் வேறெங்குமில்லாத நூதனமான குருட்டு நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் குடிகொண்டிருக்கின்றன என்பதை பலஉதாரணங்களோடு தங்களுக்குருபிக்கமுடியும். உதாரணமாக பூசனிக்காயை உணவுக்கு உபயோகப்படுத்துவதென்பதை மாத்திரம் தான் நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆனால் இவ்வூரிலோ வீட்டுக்கு வீடு பூசனிக்காயில் விதவிதமான உருவங்கள் எழுதி தொங்கவிட்டிருக்கிறார்கள். அதற்குக்காரணம் திருஷ்டி பரிகாரமாம். இன்னும் இப்பூசனிக்காய்களையும் குடைந்து, உள்ளே குங்குமத்தைபூசி மேலே கற்பூரத்தைக்கொளுத்தி வைத்து தெருவில் போட்டு உடைத்து பூசனிக்காயையும் வீணாக்கி தெருவையும் ஆபாசமாக்குகிறார்கள். அதுவும் திருஷ்டி பரிகாரமாய்! அடிமை வேலை பார்க்கும் சர்க்கார் குமாஸ்தாக்களுக்கும் விராட்டிதட்டும் பெண்மணிகளுக்கும் இவ்வளவு திருஷ்டியிருக்கிறதென்றால் ஆகாயத்தில் துப்பாக்கி சகிதம் யுத்த வீரர்களாய்ப் பறக்கும் பெண்மணிகளுக்கும், குண்டு போட்டு மேகத்தைக் கலைத்து மழையில்லாதயிடத்தில் மழை பெய்யவைக்கும் மேல் நாட்டு ஆண்களுக்கும் எந்தவிதமான திருஷ்டி தோஷமும் பாதிப்பதில்லையே! இன்னும் இந்த இராசதானி முழுதும் மிகவும் காட்டு மிராண்டிகள் வசிக்குமிடங்களில் கூட "சாமியின் உருவம் என்பதை ஒரு பிரத்தியேக கட்டடத்தில்தான் பார்த்து இருக்கிறோம், அல்லது மரத்தடியில் பார்த்திருக்கிறோம். ஆனால் ஜனங்கள் வந்து சௌகரியமாக உட்கார்ந்து பேசுவதற்காக இருக்கும் திண்ணையில் இம்மாதிரியான பயங்கரமான உருவங்கள் இருக்கும் ஒரு கோரமான அநாகரீகக் காட்சியை இச்சென்னைமாநகரில் தான் கண்டோம். இன்னும் டிராம் வண்டிகள் மிஷன்கள் முதலானவைகளெல்லாம் மின்சாரசக்தியினால்தான் ஓடுகின்றன என்று தெரிந்திருக்கும் இந்நகரில் அவைகளின்மேல் குங்குமத்தை அப்பி ஆபாசப்படுத்தும் வழக்கத்தையும் இங்குதான் பார்த்தோம். லண்டனிலும், நியூயார்க்கிலும் சென்னையைவிட

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

சென்னை சுயமரியாதை மகாநாட்டுத் திறப்பாளர். தோழர்

ம. சிங்காரவேலு

பி.எ. பி.எல். அவர்களின் பிரசங்கம்:

சென்னை சுயமரியாதை மகாநாட்டைத் துவக்கி வைத்த தோழர் எம். சிங்காரவேலு, பி.எ.பி.எல். செய்த பிரசங்கமாவது:—

தோழர்களே!

நமது சென்னை மாகாணத்தின் தலைநகராகிய மதராசில் உங்கள் சங்கம் முதலில் இன்று இந்த இடத்தில் கூடியது நமது தேச முழுமைக்கும் நன்மை பயக்குமெனக் கோருகிறேன். நாம் கூடியுள்ள இந்த இடம் நமது தேச முன்னேற்றத்தை முன்னிட்டு ஏற்பட்டிருக்கும் புராதன ஸ்தலமாகும். இந்த இடத்திலிருந்து நூறு நூறாக நமது நாட்டு இளைஞர்கள் சர்வ கல்வியில் தேர்ச்சியடைந்து நமது மக்கள் அபிவிருத்தியை நாடி வருஷா வருஷம் வெளிச்செல்கின்றார்கள். அவர்களில் பலர் இவ்விடத்தில் இருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்களுடைய பேருதவியால் இன்று நடக்கும் சுயமரியாதை மகாநாட்டின் திறப்புவிழாவினால் நாட்டில் வாழும் பலகோடி ஏழைமக்களை வறுமையினின்றும், அறிவின்மையினின்றும் மீட்கப்படுவார்களென நம்புகிறேன்.

தோழர்களே! இன்று உலகில் இருக்கும் நெருக்கடியை நீங்கள் முதலில் கவனிக்கவேண்டும். ஏனெனில் உலகம் நமது பக்கத்து வீடென உணர்தல் வேண்டும். பக்கத்து வீடு பற்றி எரியும் போது நமது வீடும் அத்தீயில் தகிக்கப்படுமென்பதை மறக்கலாகாது. முக்கியமாக உலகம் வறுமையாலும், மூடப்பழக்கங்களாலும் பீடிக்கப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் அவை வளர்ந்து கொண்டே போகின்றன. இன்று கொடிய வறுமை ஊர் ஊராகப் பரவிக்கொண்டே போகின்றது. நேற்று ஜெர்மனி, இன்று ஆங்கில தேசம், நாளைக்கு அமெரிக்காவாக எல்லா நாடுகளிலும் இல்லாமையால் வறுமையால் மக்கள் கஷ்டப்படப்போவது நிச்சயம். உலக அரசாங்கங்கள் செய்துவரும்பரிகாரங்கள் யாவும் சமயோஜித புத்திகளேயொழிய உலக கஷ்டங்களின் முதற் காரணத்தைத் தெரிந்து கொண்டவர் ஒருவருமில்லை. சில அரசு புரிவோருக்குத் தெரிந்திருந்தாலும் தீக்குருவி மண்ணில் தலையை வைத்துக்கொண்டால் அடித்துக்கொண்டுவரும் மண்புயல் போய் விடும் என்று எண்ணுவதைப்போல், கபட நாடக சூத்திரத்தினால் உலக நெருக்கடி மறைந்து விடுமென்று நினைக்கிறார்கள் போலும். நீங்கள் ஒன்று கவனிக்கவேண்டும். நீங்கள் கொண்டிருக்கும் கோரிக்கைகள் நிறைவேறவேண்டுமென உண்மையாக எண்ணுவீர்களானால் நீங்கள் தீக்குருவியைப்போல் நடக்க முடியாது. நீங்கள் அவ்வாறு நடக்கக் கூடாது. நீங்கள் விஷயங்களை நேருக்கு நேராக உண்மையாகப் பார்க்க வேண்டும். உங்கள் இயக்கத்தைக் கொண்டு நமது நாடு சுகப்படவேண்டுமானால் தற்காலத்தில் என்னென்ன நடத்தைகளால், யாருடைய நடத்தைகளால் நமது நாடு தற்போதுள்ள தாழ்ந்த நிலைமையில் வந்திருக்கிறதென்பதை தயவு தாட்சண்யமின்றி, பயமின்றி, தைரியத்துடன் எடுத்துக்காட்ட வேண்டும். எடுத்துக்காட்டி அதற்கு வேண்டிய பரிகாரங்களையும் தேடி அறியவேண்டும்.

உங்கள் இயக்கத்தைப் போன்றே நமது நாட்டில் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன. அந்த இயக்கங்களும் உங்கள் இயக்கத்தைப்போலவே நாட்டிற்கு நலத்தைக்கொண்டுவர எண்ணுகின்றன. உண்மையில் உங்கள் இயக்கமும், மற்ற இயக்கங்களும் நாட்டு நன்மையைக்கோரியவைகளாய் இருந்தபோதிலும் நேரான வழியில் செல்லுகின்றனவா என்று ஆராய்ச்சி செய்யவேண்டும். வெறுங் கோரிக்கையால் எதுவும் கூடிவராது. ஆதலின் நமது நாட்டு நெருக்கடிகளை நீக்கப்பாடுபட்டுவரும் இச்சங்கங்களின் நடவடிக்கைகளை நன்றாராய்ந்து அவைகளின் பலத்தையோ அல்லது இழுக்கையோ தெரிந்து கொண்டபிறகுதான் உங்களுடைய இயக்கத்தின் இழுக்கோ அல்லது அதன் வன்மையோ விளங்கும். உங்கள் இயக்கத்தை யார் கண்டுபிடித்தாலும் அல்லது மற்ற இயக்கங்கள் உங்களைக்கண்டுபிடித்தாலும் நமக்கு வேண்டியது உண்மையென அறிக. இந்த உண்மை எப்படி விளங்குமென்றால் எல்லா இயக்கங்களையும் பகுத்தறிவைக்கொண்டு விசாரிக்க வேண்டும். இந்த விசாரணையில் யாருக்காயினும் மனவருத்தம் நேரிடில் அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. உண்மை ஞானம் விளங்கவேண்டுமானால் கண்டனையால் தான் முடியும். அறியாத மிருகமாய் இருந்த நாம் கண்டனையாலும் விசாரணையாலும் தான் நாகரீகத்தின் முதல் படியையாகிலும் தற்போது கிட்டிவந்திருக்கின்றோம்.

முதலில் நீங்கள் நமது நாடு தற்போதடைந்துள்ள நெருக்கடியைத் தெரிந்துகொள்வது அவசியம். நாம் முன்சொன்னதுபோல், நமது நாட்டின் நெருக்கடி உலக நெருக்கடியில் சம்மந்தப்பட்டுள்ளது. அந்தநெருக்கடியாவன;—அறியாமை, வறுமை, நோய், மரண முதலிய துக்கங்களே. இவ்வித துக்கங்களால் நேர்ந்திருக்கும் நெருக்கடியைப்போக்கத்தான் அரசாங்கங்களும் உங்கள் இயக்கத்தைப்போன்ற இயக்கங்களும் பாடுபடுகின்றன. ஆனால் பலவித காரணங்களால் ஒவ்வொருவருடைய துக்க நிவாரண மார்க்கங்களில் வித்தியாசப்படுகின்றமையால் அதன் பயன்களும் வித்தியாசப்படுகின்றன. ஆதலின் அவரவர்களின் மார்க்கங்களை நாம் விசாரித்து உணரவேண்டும்.

நமது நாட்டின் நெருக்கடிகளை முதலில் எடுத்துக்கொள்வோம். நமது நாட்டில் பெரும்பான்மை மக்களுக்கு அறியாமை மேவிட்டிருப்பதை யாரும் மறக்கமாட்டார்கள். அறியாமை இருள் இருப்பதால்தான் எல்லாமதங்களும், தத்துவங்களும், சாஸ்திரங்களும், இயக்கங்களும் இந்திய நாட்டில் தோன்றியுள. எல்லோரும் அறிஞர்களாயிருந்தால் மதங்கள் எதற்கு? சாஸ்திரங்கள் எதற்கு? கல்வி கேள்வி எதற்கு? நமது நாடு பலவித அறியாமைகளால் கஷ்டப்படுகிறதென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். இதைப்போக்குவதுதான் நமக்குள்ள கஷ்டம். முதலில் மதங்களை எடுத்துக்கொள்வோம் மதங்கள் அறியாமையைப்போக்குவதென்பது வீண் கோரிக்கை. மதங்களே அறியாமையிலிருந்து புறப்பட்டவை. அறியாத பொருள்களைப்பற்றி பேசும் மதங்கள் அறியாமையைப் போக்குமென்பது தவறானதாகாதா? பல காலங்களாக மதங்கள் அறியாமையை அதிகரித்துக்கொண்டு வருகின்றன. மெஞ்ஞானத்தை அடைய முயற்சித்தோரை கொன்றும், விலங்கிட்டும் வந்திருக்கின்றன. தற்காப்புபுரிந்தோரை சித்திரவதைகளும் செய்தன. அர்த்தமில்லாத கருமங்களை அதிகப்படுத்துகின்றன. கோயில், குளம், பூசை நைவேத்தியங்களைக்கொண்டு அறியாமையை வளர்த்து வருகின்றன. இராஜாக்கள் சண்டைகளைத் தடுக்காமல் அந்தந்த மதக்கடவுள்களை ஜயம்வேண்டி துதிக்கின்றனர். இன்றைக்கும் நமது நாட்டு மதங்களால் நேரும் கேட்டை வரையவும் முடியாது. எத்தனை தெய்வங்கள்? எத்தனை கோவில்கள்? எத்தனை பூசைகள்? எத்தனை பலிகள்? எத்தனை உற்சவங்கள்? எத்தனை ஏகாதசிகள்? அமாவாசைகள், கிருத்திகைகள், சோமவாரங்கள், வெள்ளிக்கிழமைகள், எத்தனை ஆடுகளை சுற்றிவிடுவது, கோழிசுற்றிவிடுவது, எத்தனைராகுகாலங்கள், குளிகை காலங்கள்? எத்தனை நல்ல நாட்கள்? எத்தனை கரிநாட்கள்? எத்தனை நற்சகுனங்கள்? எத்தனை துற்சகுனங்கள்? எத்தனை ஆயுதபூசை, பிள்ளையார் சதுர்த்தி? எத்தனை அம்மன், பிடாரி, இருளன், பேய் பிசாசு? ஆனால் இவைபோன்ற கோடான கோடி மத கற்பனைகளை பூசித்தும் தொழுதும், வணங்கி வந்தும் நாலு கோடி ஜனத்தொகைக்கு ஒரு வேளைக்குக்கூட நல்லுணவு இல்லை 30-கோடி இந்தியருக்கு வசிக்க வீடில்லை, 25 கோடி மக்கட்கு படிப்பில்லை,1000க்கு 30, 40 பேர் அகாலத்தில் சாகின்றனர். பிறந்த குழந்தைகளில் 100க்கு 30 முதல் வருஷத்திலேயே மண்ணில் புதைக்கப்படுகின்றன. இதற்குத்தானா இத்தனை கோவில்களும், தெய்வங்களும்? இதற்குத்தானா இத்தனை நல்ல நாளும் கெட்ட நாளும்? இதற்குத்தானா புரோகிதர்களும், பிராமணர்களும், குருக்களும்? இதற்குத்தானா இத்தனை தேங்காய்கள் உடைக்கின்றது, கற்பூர சாம்பிராணி தூபதீபமிடுவதும், அர்ச்சனை செய்வதும்? இதற்குத்தானா சடகோபம் தரிப்பது? இத்தியாதி மூட பழக்க வழக்கங்களை ஆதரித்துப்பேசுவோரை மனித குலத்திற்கு விரோதிகள் என்பதற்கு என்னதடை? இக்கொடூர பழக்கங்களை நீங்களாகிய சுயமரியாதைக்காரர்கள் நமது நாட்டில் தலைகாட்ட வொட்டாமல் செய்வீர்களாகில் உலகம் உங்களைப் போற்றுவதற்கு என்னதடை? தலைவர் இராமசாமியார் மார்ட்டின் லூதரைப்போல் மதக்கற்பனைகளை நமது நாட்டினின்று ஒழியுமாறு உங்கள் இயக்கத்திற்கு வழிகாட்டியுள்ளார். அவர்காட்டிய வழியைக் கடைபிடித்து நமது 35 கோடி பாமர மக்களின் அறியாமையைப்போக்கவேண்டுமென உங்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். அறியாமையைப் போக்குவது கஷ்டமென்று அதைரியப்படவேண்டாம். சோவியத் ரஷ்யாவில் 10 வருஷத்தில் 15 கோடி மக்களின் படிப்பின்மையைப் போக்கினார்களென்றால், நமது நாட்டு 35 கோடி ஜனங்களின் அறியாமையைப் போக்குவது கஷ்டமாமோ? "அடிக்க அடிக்க அம்மியும் நகரும்" என்றனர் பெரியோர். ஆதலின் உங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் தான் வேண்டும்.

தோழர்களே! "தீண்டாமை விலக்கு" என்று வெறும் கூச்சலிட வேண்டாம். ஒவ்வொரு சேரியிலும் நுழையுங்கள்; மூட பக்தியால் வரும் கேட்டைத் தெரிவியுங்கள்; சேரியிலுள்ள அழுக்கு, மலம், சேறு, பள்ளம், மேடு முதலிய அசுத்தங்களைப் பெருக்குங்கள். சேரிக்குழந்தைகளைக் கழுவி சுத்தமாக்குங்கள்; தெருக்களைப் பெருக்குங்கள். "குடி அரசு", "தமிழன்" "சண்டமாருதம்", முதலிய பத்திரிகைகளை கிராமத்தில் வாசிக்கச் சொல்லுங்கள்; மந்திர தந்திரங்கள், பூஜை, நைவேத்தியங்கள் இவைகள் பாமர மக்களை மயக்கி ஆளச் செய்துவரும் உபாயங்கள்; நீங்கள் அவர்கள் கண்களைத் திறக்கச் செய்யுங்கள். ஒலிபெ

ருக்கிகளையும், இன்பக்காட்சிகளையும் சேரியில் அனுதினமும் கேட்கவும் செய்யுங்கள்; இதை விட மேலான வேலைகள் உலகில் உள்ளனவா? இதை மாத்திரம் செய்து நம்முடன் வாழும் 6 கோடி தாழ்த்தப்பட்டவர்களை நாகரீக மடையச் செய்வீர்களாகில், காங்கிரஸ் கோரும் சுயராஜ்ஜியத்தை விட கோடி பங்கு அதிக நன்மையைச் செய்தவராவீர்கள். தோழர்களே! செய்வீர்களா? ரஷ்யாவில் இருந்த அழுக்கும், நாசமும் நம்முடைய நாட்டை விட பதின்மடங்கு அதிகமிருந்தும் வாரமொரு நாள் ரஷ்யாவிலுள்ள ஆண், பெண், குழந்தைகள் அடங்கலும் வெளிப்பட்டு மலையாகக் குவிந்திருந்த அழுக்குகளை அழித்தார்கள். "துணிந்தோர்க்கு துக்கமில்லை" என்றனர் நமது பெரியோர். இவ்வித செய்கைகளை விட்டு விட்டு தீண்டாமையை ஒழியுங்கள், துர்க்கந்தமான கோவிலுள் நுழையுங்கள், பாசியும் அழுக்கும் நிறைந்துள்ள கோவில் குளங்களில், குளியுங்கள் என்று கூச்சலிடுவதிலா நமது தேச அசுத்தங்கள் போகும்! ஈஜியன் குதிரை லாயங்களை சுத்தஞ் செய்ய ஹர்குலீஸ் என்ற கிரீஸ்தேவன் ஆற்றை அவைகள் மேல் திருப்பினனும். அதுபோல் நமது சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி தீண்டாமையைப் பற்றி வெறும் வார்த்தைகளைப் பேசாமல் காவேரி நதியை? கோவில் மேல் திருப்புவாராக என்று நான் அவரைக் கேட்கின்றேன். தீண்டாமை பறைச்சேரியை விட்டொழிந்தால் அதாவது நானும் அவரும், மற்றவர்களும் பறையனை கோவிலுக்குள்ளும், வீட்டுக்குள்ளும், குளத்திலும், கிணற்றிலும், தெருக்களிலும் வர சம்மதித்தவுடன் அவனுடைய பசி நீங்குமா? அவனுக்கு நெய், பால் கிடைக்குமா?

அவனுக்கு உழுது பயிரிட நிலமும், நீரும் கிடைக்குமா? அவன் வீட்டுப்பிள்ளைகள் படிக்க வசதிகள் ஏற்படுமா? அவன் வசிக்கும் கிராமங்கள் நாகரீகமுள்ள கிராமங்களைப் போல் சுகாதாரமுடையதாய் விடுமா? அவனுடைய ஆடுமாடுகள் நோய் நொடியில்லாமல் வாழுமா? அல்லது அவர்களில் 1000க்கு 60 பேர் வருஷமொன்றுக்கு சாகாமல் இருப்பார்களா? பஞ்சமர்கள் உயிர் வாழ்வுக்குரிய வசதிகளைச் செய்துகொடுக்க சக்கரவர்த்தியைப் போலொத்தவர்கள் அநுபவிக்கும் சுகபோகங்களை விடவேண்டிவரும் இந்தவிஷயங்கள் யாவும் பொருளாதாரத்தைப் பொருத்துள்ளன. அதற்கும் பொருள் யாரிடத்திருந்து வரவேண்டும்? நமது சக்கரவர்த்தியிடத்திலிருந்தும், லச்சுவந்தர்களிடமிருந்தும் எங்களைப்போன்றவர்களிடமிருந்தும் வரவேண்டும். இதுதான் நியாயம் ஆதலால் தீண்டாமை ஒழியுங்களென்று சொல்லிக்கொண்டு வந்தால் மூடமக்கள் அதன் சூக்ஷுமந் தெரியாது அதனை விசேஷமாக கொண்டு மதிமயங்கி இருந்த நிலையிலேயே இருந்து வருவார்கள். இதுநான் தீண்டாமைஎன்னும் கூச்சலின்எக்கியம். மற்றொரு நியாயத்தையும் கவனிக்கவேண்டும். இந்துகோவில்களிலாவது, மகமதியர் கோவில்களிலாவது, கிருஸ்தவகோவில்களிலாவது நமது 6 கோடிதாழ்த்தப்பட்டவர்கள் நுழையச் சொல்வதும் ஓர் தந்திரவார்த்தையென்று அறியவேண்டும். எப்படியெனில், மதங்கள் மூடத்தனத்தை கற்பிக்கும் ஸ்தாபனங்களாகும். அந்த ஸ்தாபனங்களில் சேர்க்கப்படாதவர்கள் அதிகப்படுமன்றோ? அதனால் உண்டாகும் மூடத்தனத்தைக் கொண்டு அவர்களை இந்த 5000 வருஷம் ஏமாற்றியதைப் போல் இன்னும் 5000 வருஷம் ஏமாற்றலாமன்றோ? இந்நியாயத்தையும் நமது தோழர்கள் கவனிக்கவேண்டும். உண்மையாக விசாரிப்போமானால் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பது ஏழைகளை ஏமாற்றி அவர்கள் அறிவை விளங்கவைக்காதிருக்கும் சூழ்ச்சியென்றே ஏற்படுகின்றது. இதைப்போலவே கதர், "தரித்திரநாராயணனைக்" காக்கும் கருவியென்றும், தேசீயத்தால் சுயராஜ்யம் வருமெனவும், சுயராஜ்யத்தில் பாமரமக்கள் சுகப்பட்டு வாழ்வர் எனவும் கற்பித்துவருவது.

அறியாமை நிறைந்த காலத்தில் தோன்றிய மதங்களைக்கொண்டு சிலர் பெரும்பான்மையோரை மூடத்தனத்தில் வைத்து அவர்களை ஆண்டு வருவதைப்போல், ஜாதியென்ற கற்பனைகளைக் கொண்டு ஒருவனுக்கொருவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் எனப் பல வேற்றுமைகள் உண்டாக்கி அந்த வேற்றுமை காரணமாக சிலர் மாத்திரம் கஷ்டமில்லாத வேலையைச் செய்யவும், பலர் கஷ்டமிகுந்த வேலையைச் செய்யவும் திட்டங்கள் ஏற்படுத்தி, அவனவன் அந்த வேலையிலேயே இருந்து வரவேண்டுமென்ற சட்ட திட்டங்களையும் உண்டாக்கி கஷ்டப்பட்டுவரும் பாமர மக்களை ஆண்டுவருவதும் ஒருசூழ்ச்சியே. ஜாதியும் மதத்தைப் போன்று மூடமனத்தை வளர்க்கும் ஏற்பாடென அறிக. உயர்வு ஜாதியில் பிறந்தோர் சாதாரண கைகளால்செய்யும் வேலைகளைச் செய்யார். தோட்டி வேலை, சக்கிலி வேலை, வண்டி ஓட்டும்வேலை, மீன் பிடிக்கும்வேலை, கருமாரவேலை, சம்மட்டி வேலை, உழவு வேலை இத்யாதி கஷ்டவேலைகளைப் பிராமணனுக்கு ஏற்படுத்தவில்லை. ஏன்? அவனே ஜாதியை முதலில் வகுத்தவனாதலால், அவனுக்குமேலான வேலை யொன்றை வைத்துக்கொண்டு மற்றபடி திரேக அவயவங்களால் செய்யும் வேலைகளை கீழ்ஜாதியோருக்கு ஏற்பாடு செய்தான். இதனைக்கண்ட மற்றையோர்களும் தங்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வு வேலையில் ஏற்படுத்திக்கொண்டு கஷ்டவேலை செய்பவனைத் தனக்குத் தாழ்ந்தவனென்று சொல்ல ஆரம்பித்தார்கள். இந்த சூழ்ச்சியாலும் பிராமணரல்லாத பல கோடி பல்லாயிர ஜாதியார் கஷ்டவேலையில் அகப்பட்டுக், கஷ்டமில்லாத வேலை செய்வோர் ஆதிக்கத்தில் கிடந்து வருந்துகின்றார்கள். சிலர், பலரை அடக்கி ஆள்வதற்கு ஜாதியும் ஓர் கருவியாய் வாய்த்திருக்கின்றது.

ஜாதி இந்தியாவில் முளைத்த ஒரு கற்பனை யென்றே கூறவேண்டும். எளியவன், பணக்காரன் என்ற ஓர் கற்பனை மற்ற தேசங்களில் உண்டு. இது சுத்தமாக இந்தியாவில் மாத்திரம் ஏற்பட்ட கற்பனையாகும். இதனை நமது நாட்டிலிருந்து ஒழிப்பதுதான் கஷ்டம். புத்தர் காலத்திலிருந்தே ஜாதியை ஒழிக்கவேண்டுமென்ற முயற்சி இருந்து வந்தது. ஒழிந்தபாடில்லை. மகம்மதியர்களிலும் ஜாதியை ஒழிக்க முடியவில்லை. கிருஸ்துவர்களிலும் முடியவில்லை. இரத்தத்தை உறிஞ்சும் அட்டை போல் இந்து ஜன சமூகத்தை பிடித்த நமது தேச ஜாதி கலப்பு மணத்தால் ஒழியுமென்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால், கலப்புமணம் செய்துகொண்டவர்கள் தனிப்பட்ட ஒரு ஜாதியாகின்றார்கள். இந்த விதங்களால் இன்னும் ஜாதிகள் வளர்ந்து வருகின்றன. இது எப்படிஒழியுமென்று எண்ணுகின்றீர்கள்? எனக்கோர்வழிதோன்றுகின்றது. பகுத்தறிவை உயர்தரக்கல்வி மூலமாக வளரச்செய்யவேண்டுமென்பது. இதிலும்கஷ்டமிருக்கிறது. சென்ற 50 வருஷங்களாக உயர்தரக்கல்வியில் தேர்ச்சியடைந்துவரும் பிராமணர்கள் ஜாதியை விட்டபாடில்லை. நமது ராஜகோபாலாச்சாரியும்; சத்திய மூர்த்தியும் பூணூலைக்கழற்றி எறிந்தனரா? இல்லை என்றால் எங்கே உயர்தரக்கல்வியின் பயன்? ஆனால் உங்கள் இயக்கம் உண்மையானால் சுயமரியாதைக் கட்சியோர் ஜாதியை முற்றும் விட்டொழிக்க வேண்டும். பிராமணர்கள் தங்கள் ஜாதியை விடாவிட்டாலும் சுயமரியாதையைச் சேர்ந்த முதலியார், நாயுடு, பிள்ளை, செட்டியார் முதலியவர்கள் பகிரங்கமாக ஜாதியை விட்டொழித்தோமென விளம்பரப்படுத்த வேண்டும். ஜாதியில் பிராமணருடன் உறவாடுதலையும் பகிஷ்கரிக்கவேண்டும். பாமர மக்களுக்கு சுடரொளியாக உங்கள் இயக்கம் வந்துள்ளதாக எண்ணுகிறேன். நீங்கள் தான் இந்த ஆயிரந்தலையுடைய விஷப்பாம்பை நசுக்க வேண்டும். உங்களால் ஆகாவிட்டால் உலகிற்கு இனி எந்த நம்பிக்கையும் கிடையா.

ஜாதிமத வித்தியாசத்தால் தான் என்ன சுயராஜ்யத்தை அளிப்பதென்று பிரிட்டிஷாருக்கே சந்தேகமாயிருக்கின்றது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் சுயராஜ்யமா? அல்லது பொது பிரதிநிதித்துவம் சுயராஜ்யமா? இதன் விஷயத்தில் காங்கிரஸ் நடவடிக்கை மதில்மேல் கருடனே போல் இருந்து வருகின்றது. காந்தியாருக்கு ஜாதியும் வேண்டும், மதமும் வேண்டும். ஆனால் 6 கோடி மகம்மதியர்களுக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கொடுக்கலாம். ஆனால் மற்ற 6 கோடி தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்துக்களுடன் பொதுவாக பிரதிநிதித்துவம் வேண்டுமாம். தாழ்த்தப்பட்டவர்கட்கு தனிப்பட வேண்டாவாம். இது என்ன சூழ்ச்சி?

மதத்தில்வேறுபட்டவனுக்குத்தனிப்பட வேண்டும். ஜாதியில் வேறுபட்டவனுக்கு தனிப்பட வேண்டாவாம் இது என்ன மதி? இந்த இருபிளவு கொண்ட மனப்பான்மையால் தான் காந்தியாருக்கு எதுவும் கைகூடவில்லை. மதத்தையும் ஜாதியையும் உதறித்தள்ளிவிட்டு, "இந்தகொடுமையான கற்பனைகட்கு எங்கள் சுயராஜ்யத்தில்" எவ்வித ஆதரவும் கிடையாது. மதமற்ற ஜாதியற்ற சுயராஜ்யமே என்னுடையது. ஆதலின் இந்திய மக்கள் மதத்தையும் ஜாதியையும் தவிர தாங்கள் தான் சுயராஜ்யமென்று கர்ஜிப்பாராகில் உலகம் போற்றும். போற்றுவதை சொல்லவும் முடியுமோ? ஆனால் கங்கா தீர்த்தத்தைக்கூடவே கொண்டு போகிற மாளவியாவும், இந்துமத சபைத்தலைவராகிய மூஞ்சேயும் சம்மதிப்பார்களா? இவர்கள் சம்மதித்தாலும் மதவைராக்கியத்தில் மூழ்கியிருக்கும் ஷவுக்கத் அலி உடன் படுவாரா? ஆதலின் தேசத்திற்கு சுயராஜ்யம் வரவேண்டுமானால் பாமர மக்கட்கு வேண்டிய உதவிகளை ஜாதிமத கற்பனையின்றி கொடுப்பதாக அவர்கள் திருப்தி செய்தால் தான் சுயமரியாதைக் கூட்டார் தங்கள் காலத்தில் சுயராஜ்யத்தைக்குறித்துப் பேசலாம் அவ்வுண்மைகளை பாமர மக்களுக்கு அளிக்காத வரையில் என்றும் சுயராஜ்யத்திற்கு அருகனாகான்.

உலகம் நெருக்கடியில் இருக்கிறதென்றும் அதனை நீங்கள் கவனிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டேன். உலக நெருக்கடி பொருளாதார வேற்றுமையால் உண்டாயிருக்கிறதென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தக் கொடிய வேற்றுமையைப்பற்றியும் எரியும்நெருப்பைஎறத் தள்ளுவது போல் மதங்களும் நெருக்கடியை அதிகப்படுத்தி வருகின்றன. மதங்கள் அறியாமையை வளர்த்துக்கொண்டு பொருளாதார வேற்றுமையையும் பெருக்க வைத்துக்கொண்டு வருவதைக் கவனிக்கவேண்டும். பெரியோர் மதக்கற்பனைகளை உண்மையாக நம்பிப்பல செலவுகளைச் செய்து முற்றும் ஏழைகளாகின்றார்கள். இதனைச் சற்று முன்னர் விபரமாகக் கூறியுள்ளேன். மதங்களை நம்பி தெய்வங்கள் தங்களைக் காப்பாற்றும், பூசை, நெய்வேத்தியம் பிரார்த்தனை முதலிய ஆபாசங்கள் காப்பாற்றுமென நம்பி மெஞ்ஞான சிகிச்சையின்றி பாமர மக்கள் கொள்ளைநோயால் லட்சக்கணக்காக அகாலத்தில் சாகின்றார்கள். இந்த மரணம் தேசத்திற்கு கோடி கோடி கோடான கோடி விலை மதிப்புள்ள உயிர்களைக் கொள்ளை கொள்கின்றது, இதனால் நமது தேசப் பொருளாதார நிலைமை குறைந்தே வருகின்றது.

விவசாயிகள் 1000 கோடி ரூபாய் கடன்பட்டிருப்பதாக ஒரு கணக்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.)

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குரு, "ஜீன்மெஸ்லியரின்" மரணஸாசனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

கட்டுரை 8,

(25-வது மலரின் தொடர்ச்சி.)

32 கடவுள் என்பது ஓர் பரம்பரை வழக்கம்.

ஒரு குடும்பத்தின் சொத்தும் அதன் பொறுப்பும் எப்படி ஒரு தகப்பனால் தன்னுடைய சந்ததியார்களுக்குக் கொடுக்கப்படுகிறதோ அதைப் போலவேதான் மதம் என்பதும் கொடுக்கப்படுகிறது. கடவுள் என்பதை ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லிக்கொடுக்காமலிருந்தால் உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்குக்கடவுள் என்றால் என்னவென்பதே தெரியாது. ஒவ்வொருவனும் தனது முன்னோர்களிடமிருந்து எந்தக் கடவுள் என்பதைப்பற்றித்தெரிந்துகொண்டானோ அதையேதான் தனது சந்ததியார்களுக்கும் சொல்லுகிறான். ஆனால் அவனவனுடைய இஷ்டத்திற்குத்தக்கபடி ஒவ்வொருவனும் அந்தக்கடவுளைத் திருத்தியும், புதுப்பித்தும் அழகுபடுத்தியும் சொல்லுகிறான்.

33. அதன் ஆரம்பகாலம்.

மனிதனுடைய மூளையானது முக்கியமாக இளம்பிராயத்தில், ஒரு மிருதுவான மெழுகைப் போல் எந்தவழியிலும் திருப்பக் கூடியதாக இருக்கிறது. தானே யோசிக்கும் தன்மைவரக்கூடாத பருவத்தில் மனிதனுடைய அபிப்பிராயங்களையெல்லாம் உண்டு பண்ணுவது அவனுடைய கல்வியேயாகும். இதையுணராமல் சிறுவயதில் சரியாகவோ, தப்பாகவோ நமது மண்டைக்குள் புகுத்தப்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் நமது பிறப்பிலேயே இயற்கையாக ஏற்படும் உணர்ச்சியென்று தப்பாக நம்பிக்கொண்டிருக்கிறோம். இந்த மனப்பான்மைதான் நமது பிழைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கிறது.

34. அது பரவும் விதம்.

யார் நமக்குப் போதிக்கிறார்களோ அவர்களுடைய அபிப்பிராயங்களே நமக்குள் புகுத்தப்படுகின்றன. நம்மைவிட அவர்களே அதிக புத்திசாலிகள் என்றே நாம் நம்புகிறோம். நமக்குக் கற்பிக்கப்படும் விஷயங்களை அவர்கள் பூரணமாய் அறிந்துகொண்டுவிட்டதாகவே நாம் நினைத்துக்கொள்ளுகிறோம். அதனால் அவர்கள்மீது அதிகமான நம்பிக்கை வைக்கிறோம். நமக்கு நாமே உதவிசெய்துகொள்ள முடியாத பக்குவத்தில் நம்மைப்பற்றிக் கவலையெடுத்து வந்ததனால் பிறகு நம்மை ஏமாற்றமாட்டார்கள் என்றே நிர்மானிக்கிறோம். இந்த எண்ணத்தினால்தான் ஆதரவு இல்லாத ஆபிரக்கணக்கான தவறுகளைக் கண்மூடித்தனமாய்க் கைக்கொள்ள ஆரம்பிக்கிறோம். அவர்கள் சொல்வதைப் பற்றி ஆராய்ச்சிசெய்யக் கூடாது என்று அவர்கள் சொல்லியிருந்தும்கூட அவர்கள்மீது நம்பிக்கை குறைவதில்லை. ஆனால் அதற்கு மாறாக அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு மரியாதை செய்கிறோம்.

35. பகுத்தறிய முடியாத காலத்தில் கற்பிக்கப்பட்டவை.

மனித சமூகமானது சரி எது, தப்பு எது என்றும், வலதுகை எது, இடதுகை எது என்றும் தெரிந்துகொள்ளமுடியாத ஒரு பிராயத்திலேயே மதக்கொள்கைகளைப்பற்றி சொல்லிக் கொடுப்பதில் போதனைக்காரர்கள் சர்வஜாக்கிரதையாக இருக்கிறார்கள். 40 வயதான ஒரு மனிதனுடைய குணாதிசயங்களைத் திருத்துவதென்பது எவ்வளவு கஷ்டமான காரியமோ, அவ்வளவு கஷ்டந்தான் 40 வயதான மனிதன் தனது சிறு பிராயத்திலிருந்தே கடவுளைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை மாற்றுவதிலும் இருக்கிறது.

36. இயற்கை விநோதங்களுக்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை.

கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதற்கும் அந்த உண்மையை நிரூபிப்பதற்கும் இயற்கை விநோதங்களே அத்தாட்சியாகும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நான் கேட்பதொன்று. இயற்கையைப்பற்றி நினைக்கவும், அதனுடைய வளர்ச்சியைப்பற்றி ஆலோசிக்கவும் இவ்வுலகில் எத்தனை பேருக்கு அவகாசமும், சாமர்த்தியமும், போதிய பிரியமும் இருக்கிறது என்று கேட்கிறேன்? உலகத்திலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இவ்வியற்கையைப் பற்றிய கவலையே கிடையாது. ஒரு குடியானவன் தான் தினந்தோறும் பார்த்துக்கொண்டிருக்கிற சூரியனுடைய அழகைப் பார்த்து மனங்கசிவதில்லை. ஒரு கப்பலோட்டியானவன் சமுத்திர அலைகளின் அசைவுகளைப்பார்த்து ஆச்சரியப்படுவதில்லை. அவனுக்கு அதிலிருந்து மத சம்பந்தமான தத்துவார்த்தங்கள் தோன்றுவதுமில்லை. இயற்கை விநோதங்களுக்குக் காரணம் கூறமுடியாத ஏதோ சிலருக்கு மாத்திரம் கடவுளின் சக்தி இயற்கை வழியாக அறியக்கூடியதாகத் தோன்றலாமே யொழிய, இயற்கையின் விசேஷங்களைக் கொண்டுகடவுளிருப்பதாக நிரூபித்து விட முடியாது. நிதானமான மனப்பான்மையை யுடைய ஒரு தத்துவ ஞானிக்கு இயற்கையின் விநோதங்கள் ஒரு நிரந்தரமான சட்டங்களுக்குட்பட்டது என்று தோன்றுமே யொழிய, வேறு எவ்விதத் தத்துவமும் தோன்றாது. இயற்கை யென்பது பல வேறான வஸ்துக்கள் பல விதங்களாக ஒன்றுசேருவதின் பயனே யாகும் என்ற உண்மை அவனுக்குப் புலப்படும்.

37 & 38. இயற்கை விநோதங்களுக்குக்காரணம் உண்டு.

இவ்வியற்கை விநோதங்களிலிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய அரிய விஷயங்களும் அவைகளைத்தனது சௌகரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியங்களும் இருக்க, அவைகளுக்குக்காரணமான ஒன்று, அறிய முடியாத ஒன்று, கற்பனையான ஒன்று இருப்பதாக நினைத்துக்கொள்வது எவ்வளவு பொருத்தமற்ற தர்க்கம் என்பதைப்பாருங்கள். நம்மால் அறியக்கூடிய ஒரு விஷயத்திற்கு நம்மால் அறியவே முடியாத ஒன்று கர்த்தா என்று சொல்வதானது எவ்வளவு அபத்தமானது என்பதை யோசித்துப்பாருங்கள். கடவுள் என்றால் என்ன? ஆவி அல்லது ஆத்மா என்றால் என்ன? நமக்கு ஒன்றுமே புலப்படாத நிலைமையைச் சொல்லக்கூடிய வார்த்தைகளாகும். ரிஷிகளே! குருமார்களே! உங்களுக்கொரு வார்த்தை. இயற்கையையும் அதன் காரண காரியங்களையும்பற்றி சிந்தனை செய்யுங்கள். பிறகுதான் அதன் உண்மையை உணர்வீர்கள். அவ்வாறு உணர்ந்து கொண்டபின் இயற்கைக்கு மாறான கட்டுக்கதைகளைப்போன்ற அபிப்பிராயங்களைத் தேடி அலையாதீர்கள். ஏனெனில் அவ்வாறு செய்வதால் உங்களுடைய புத்தி விசாலப்படுவதற்கு மாறாக, உங்களை நீங்களே அறிந்து கொள்ள முடியாமல் உங்களுடைய மூளைகளைச்சிக்கலில் கொண்டுபோய்ப்புகுத்திவிடுகிறீர்கள்.

கடவுள் என்ற ஒன்று இல்லாமல் இயற்கைக்குக்காரணம் கூற முடியாதென்கிறீர்கள். அதாவது உங்களுக்கு எதைப்பற்றி மிகச்சொற்பமாகத் தெரியுமோ, அந்த ஒன்றை விளக்குவதற்காக, உங்களுக்கு ஒன்றுமே தெரியாத ஒன்றை (கடவுளை)க் காரணமாகக் காட்டுகிறீர்கள். எது ஒன்று விளங்காததாக இருக்கிறதோ அதை இன்னும் விளங்காத ஒன்றைக்கொண்டு விளக்கிவிடுவதாகப் பாசாங்கு செய்கிறீர்கள். ஒரு முடிச்சின்மேல் இன்னும் பல முடிச்சுகள் போட்டு அதை அவிழ்த்து விட்டதாகக் கருதிக்கொண்டிருக்கிறீர்கள். மிகத்தீவிரமான தத்துவஞானிகளே! கடவுள் இருப்பதை நிரூபிக்க வேண்டுமானால் தாவர நூலிலுள்ள விஷயங்களைக்காட்டிப்படியுங்கள்; மனித உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவைப்பற்றியும் சோதனை செய்து அறிந்துகொள்ளுங்கள்; ஆகாயத்தில் பறந்து போய் நட்சத்திரங்களின் சுழல்களைக்கணக்கெடுங்கள், பிறகு கீழே பூமிக்கு வந்து தண்ணீர் ஓடும் முறைகளைக்கவனித்து அறியுங்கள். அதன் பிறகு வண்ணத்திப்பூச்சிகள், புழுக்கள், நீர் ஜந்துக்கள், அணுக்கள் முதலிய எல்லாவற்றிலும் உங்களுடைய கடவுளின் பெருமை தெரிவதைப்பற்றி சாங்கோபாங்கமாகப் பிரசங்கிக்கலாம். இவைகளெல்லாம் உங்கள் கடவுள் இருப்பதாக ருசுப்படுத்திவிட முடியாது. ஆனால் இவைகள் எதை ருசுப்படுத்தும் என்றால் இயற்கையிலுள்ள அணுக்கள் பல விதங்களாகச் சேரும் முறை, அதன் காரண காரியங்கள் முதலியவைகளைப்பற்றி உங்களுக்கு ஒரு எழவுமே தெரியாது என்பதைத் தான் ருசுப்படுத்தும்.

சென்னை சுயமரியாதை மகாநாடு.

——

வரவேற்புத்தலைவர் பண்டிதர் லட்சுமிநரசு பி. ஏ. வரவேற்பு பிரசங்கத்தில் கூறியதாவது:—

'சுயமரியாதை என்பது சுய நிர்மாணத்தையே குறிக்கும். அதனால் சுதந்திரமேற்படும். பழக்கவழக்கங்களைக்கவனியாது பகுத்தறிவைக்கொண்டே நடப்பது சுதந்திரம். கட்டுப்பாட்டுக்கு அடங்காது, மனசாட்சிக்கு எற்படுவதுதான் ப்பதேசுதந்திரம்; உண்மை எதுஎன்பதை உணரும் சக்தியே சுதந்திரமாகும். பழைய கொள்கைகள் மறைந்து புதிய கொள்கைகள் ஓங்குவதே நாகரீகவளர்ச்சியாகும். தற்கால ஜனங்களின் மனப்பான்மை ஜோசியம் முதலியவற்றை ஏற்றுக்கொள்ளாது, எதனையும் காரணமின்றி ஒத்துக்கொள்வதில்லை. பகுத்தறிவு உபகருவியாகவிருக்கிறது. அறிவு விளக்கத்திற்கு விஞ்ஞான ஆராய்ச்சி இதுபோது அடிப்படையாக விருக்கிறது. பழைய கொள்கைகள் மடிந்து வருகின்றன. மனிதன் தனது க்ஷேமத்திற்காகவே எல்லாக்காரியங்களையும் நடத்துகின்றான். இயற்கைதத்துவங்களை அடக்கவேண்டுவது மனித சமூக நன்மைக்கு அவசியம். மனிதர்களுக்குள் பரஸ்பரம் உணர்ச்சியும் இயற்கைப் பொருள்களை பகிர்ந்து கொள்ளும் பான்மையும் வேண்டும். மற்றவர்கள் சொன்னதை ஆதாரமாகக்கொண்டதால் விஞ்ஞான வளர்ச்சி தடைப்பட்டது.

நூற்றாண்டுகளாக விஞ்ஞான அபிவிருத்தி எதிர்பாராதவாறு ஏற்பட்டுள்ளது அதனால் நன்மையும் தீமையும் உண்டு.

விஞ்ஞான சாஸ்திரம் மட்டும் போதாது; வெள்ளம், விபத்துகள் ஏற்படுத்துகின்றன. அவைகளிலிருந்து தப்பவே ஆதாவு வேண்டியதாயிற்று. அதனால் மதம்வேண்டியதாயிற்று. மரணம் முதலிய நினைவை மாற்றவே மதம் ஏற்பட்டது. மனிதன் நித்தியத்தை அடையவே மதம் ஏற்படுத்திக்கொண்டான். மதத்தின் கோட்பாடு ஆத்மா ஒன்று உண்டு என்பது. மதத்தைப்பற்றி குறைகூறக்கூடாது, ஆத்மா இருக்கிறதென்ற உணர்ச்சிபோனால் எல்லாவித மூடப் பழக்க வழக்கங்களும் ஒழியும். ஆத்மா என்பதில் நம்பிக்கை இருக்கும்வரையில் மக்கள் தமது தற்கால வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொள்ளவே முடியாது.

ஆத்மா நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை ஒழியாதவரையில் புரோகிதம் ஒழியாது. புரோகிதர்களே ஜாதி வித்தியாசத்திற்குக்காரணம். புரோகிதர்களை ஒழித்தால் மற்றபடி க்ஷேமம் உண்டாகும்.

இன்னும் இயற்கையை நீ அலட்சியப்படுத்திவிட்டாய் என்பது விளங்கும். தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குக்கூட புலப்படாத பல அணுக்களும், ஜந்துக்களும் இருக்கின்றன என்ற ஒரு விஷயமே உனக்குப் புலப்படவில்லை யென்பது தான் விளங்கும், கடைசியாக, ஸ்பரிசிக்கக்கூடியதும், உணரக்கக்கூடியதுமான பல விஷயங்களை உனது புத்தியானது உணர்ந்து கொள்ள முடியாமல், தெரியாத ஒரு உலகத்தில் உன அறிவுக்கு எக்காலும் புலனாகாத ஒன்று தலைவனாக இருப்பதாக நீ சொல்லிக் கொள்வதானது, உனக்கு ரொம்ப லகுவாக இருக்கிறது என்கிற முட்டுதான் இதனால் வெளிப்படுகிறது.

(தொடரும்)

சென்னை சுயமரியாதை மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

—:::—

26-12-31 சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சுயமரியாதை மகாநாட்டு த்தீர்மானங்கள்.

பார்ப்பனரல்லாத இயக்கத்திற்கு பெரும் உதவியாளரும், பெரும் ஆராய்ச்சியாளருமான தோழர் பி. வி. மாணிக்கநாயகர் அவர்கள் இறந்ததைக் குறித்து இம் மகாநாடு தனது அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்ளுகிறது. பிரேரேபித்தவர் எஸ். குருசாமி பி. ஏ. ஆமோதித்தவர் கே. வி. அழகர்சாமி, முருகேசன்.

செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர் மாகாண சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களை இம்மகாநாடு ஒப்புக்கொள்கிறது. பிரேரேபித்தவர் அ. பொன்னம்பலனார். ஆமோதித்தவர் திருஞானசம்பந்தம், தமிழன் ஆசிரியர் அப்பாத்துரையார், என். பி. காளியப்பன், வி. பி. எஸ். மணியார், எஸ். வி. லிங்கம்.

தேசியத்தின் பெயரால் காங்கிரஸ் தொண்டர்கள் உண்டியல் பிச்சை எடுப்பது மனிதனுடைய அடிமைத்தனத்தையும் சோம்பேரித்தனத்தையுமே பெருக்குவதால், அதை இம்மகாநாடு மிக அழுத்தமாகக் கண்டிக்கிறது. பிரேரேபித்தவர் கே வி. அழகர்சாமி, ஆமோதித்தவர் எஸ். வி. லிங்கம், பண்டித திருஞானசம்மந்தர்.

காங்கிரஸ் போரால் காந்தியார் சிறுபான்மையோருடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதால், அவருடைய மனப்பான்மையை இம்மகாநாடு கண்டிப்பதுடன் தோழர் அம்பெட்கார் அவர்களை இம்மகாநாடு ஆதரிக்கிறது. திராவிடன் ஆசிரியர், டி. எஸ். ஆறுமுகம், சிவராஜ் பி. ஏ. பி. எல்., கே வி அழகர்சாமி, வித்வான் முனிசாமி, அய்யாக்கண்ணு முதலியவர்கள் பேசியபின் தீர்மானம் நிறைவேறியது.

உலக பொதுப் பாஷையாகிய ஆங்கிலத்தை நமது மக்கள் கற்கக்கூடாதென்ற கெட்ட எண்ணத்தல் "ஹிந்தி" பாஷையை தேசபாஷை என்ற பெயரால் மக்களிடம் பரப்பவேண்டுமென்று ஒரு கூட்டத்தார் பிரசாரம் செய்துவருவதைக்கண்டு நம் நாட்டு மக்கள் ஏமாந்து போய்விடக்கூடாதென்று எச்சரிப்பதோடு சென்னை நகர சபையார் ஹிந்தியை ஆதரித்தமைக்கு இம்மகாநாடு வருந்துகிறது. தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வயோதிகர் ஜெகஜாலமா?

(வைத்தியம் கிழித்தது.)

தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி சென்னையில் கூடியபோது அதில் ஒரு ருசிகரமான தீர்மானம் வந்தது. பாவம் அது நிறைவேறாமல் போனதைப்பற்றி வருந்துகின்றோம். அத்தீர்மானம் '40 வயதுக்கு மேற்பட்டவர்களும், 16-வயதிற்கு உட்பட்டவர்களும் சத்தியாக்கிரகம் செய்வதில் கலந்து கொள்ளக்கூடாது' என்பதாகும். இத் தீர்மானம் திரு ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் சூழ்ச்சியால் கொண்டுவரப்பட்டது என்று யாரும் நினைப்பதற்கில்லை. திரு. சத்தியமூர்த்தி அய்யர் அவர்களின் தந்திரத்தால் கொண்டுவரப்பட்டது என்று கருதுவதற்கில்லை. அல்லது உத்தியோகவேட்டை சிக்கலையால் புதிதாகக் காங்கிரசில் புகுந்திருக்கும் வீரர்களின் இரைமறைவுச்சாமர்த்தியத்தால் கொண்டுவரப்பட்டது என்று சொல்லுவதற்கும் இல்லை. எப்படியோ வந்தது எவ்விதமோ தோற்றுப் போயிற்று. நிறைவேறியிருந்தால் மிகவும் சாதகமாக இருந்திருக்கும். 40 வயதுக்கு மேற்பட்டவர்களாகவிருக்கும் நமது அய்யர்கள், ஆச்சாரிகள், மற்றுஞ்சில மந்திரிக்காதல் காங்கிரஸ்காரர்கள் தைரியமாகக்காங்கிரசில் இருக்கலாம். அஞ்சாமல் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கும்படி கூறலாம். இப்பொழுது அந்த நிலைக்கு இடமில்லையே. ஜெயிலில்போய் கஷ்டப்படுவதென்றால் எல்லாவற்றையும் கொஞ்சம் யோசனை செய்துதானே ஆரம்பிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் 40 வயதுக்குமேற்பட்ட காங்கிரஸ் தலைவர்களே உங்களுக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். போனது போகட்டும் மன வருத்தம் வேண்டாம். பிறகு பார்த்துக்கொள்ளலாம் சமயம் கிடைக்காமல் போகாது.

மறுவிவாகம்.

சென்னை விதவா விவாக சபையின் ஆதரவின்கீழ் 28-12-31ந் தேதி மாலை சுமார் 25 வயதுள்ள ஓர் வைசிய "விதவைக்கும்" கர்நூல் ஜில்லாவைச் சேர்ந்த நந்தியாலில் வியாபாரம் செய்யும் 35 வயதுள்ள பலுரு திரு. சின்ன திம்மையா செட்டியார் அவர்களுக்கும் விவாகம் நடைபெற்றது. மணமகனுக்கு இரண்டு குமாரர்களிருக்கிறார்கள். ஷை சபையின் ஆதரவில் விவாகம் செய்து கொண்ட தம்பதிகளான திரு. நெர்வாதி சுப்பையா செட்டியார் அவர்களும், அவரது மனைவியார் ஸ்ரீமதி நாகரத்தினம் அம்மாள் அவர்களுமே ஷை விவாகத்திற்கு காரணஸ்தர்களாவார்களென ஷை சபையின் காரியதரிசி எழுதுகிறார்.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

ஷை சங்கத்தின் வாராந்திரக் கூட்டமொன்று 27—12—31ம் நாள் ஞாயிறன்று மாலை 7-15 மணிக்கு சங்கத்தலைவர் தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடி, பிரபல இஞ்சினீயரும், தமிழறிஞரும், சீர்திருத்தப்பற்றுடையவருமான தோழர், பா. வே. மாணிக்க நாயகர் அவர்கள் காலஞ்சென்றதற்கு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதபுஸ்தகங்களிலுள்ள சில குற்றங்கள்.

(T. D. கோபால்)

இந்து மத புஸ்தகங்கள் இந்துக்களால் மகத்துவம் வாய்ந்ததெனவும், மகிமை வாய்ந்ததெனவும், சாக்ஷாத் ஈஸ்வரனுடைய அனுக்கிரகம் பெற்றவர்களாலும், அவரால் ஓதுவிக்கப்பட்ட புண்ணியபுருஷர்களாலுமேதான் எழுதப்பட்டதெனவும் கருதப்பட்டு வருகின்றது. நாம் அப்புஸ்தங்களுக்கு ஓர் விதமதிப்பையோ, அல்லது கௌரதையையோ அளியாமல், சாதாரணமாகக் காணப்படும் புஸ்தகங்களை எவ்வாறு கற்று, அவைகளை ஆராய்ச்சி செய்கின்றோமோ, அவ்வாறே மதபுஸ்தகங்களையும் நாம் சுலபமாகவே கற்று, அவைகளை ஆராய்ச்சி செய்யக்கூடிய சாதனங்கள் நமக்கேற்படவேண்டும். அப்பொழுதுதான் அப்புஸ்தகங்களில் காணப்படும் கவிகளினழகைக்கண்டு நாம் களிப்படைவதற்கும், அவைகளில் கூறப்பட்டிருக்கும் நீதிகளைத்தழுவி நடப்பதற்கும், அவைகள் போதிக்கும் உண்மைகளைப் போற்றிப்புகழ்வதற்கும் முடியும். அவ்வாறேதான், அதாவது மத புஸ்தங்களை நாம் ஆராய்ச்சி செய்ய அனுமதிக்கப்படுவோமேயானால், அப்பொழுது தான் அப்புஸ்தகங்களில் காணப்படும் ஆபாசமான கதைகளையும், அநாகரீகமான செய்கைகளையும், அசம்பாவித பழக்க வழக்கங்களையும் நாம் கண்டிக்கலாம். மானிடர்கள் நாகரீக வாழ்க்கையின்றி மிருகப்பிராயமான வாழ்க்கையிலீடுபட்டிருக்கும் காலத்தில், காட்டுமிராண்டிகளெனக் கருதப்பட்ட சில கயவர்களாலும், சுயநலக் கூட்டத்தார்களாலுமே தான் அவைகள் எழுதப்பட்டதெனவும் தைரியமாக எடுத்துரைக்க முடியும். ஆனால், இத்தகைய சாதனங்களொன்றும் மக்களுக்கு அளிக்கப்படாமலிருந்து வருகின்றது. அப்புஸ்தகங்கள் கடவுள் அருள்பெற்றவர்களாலும், கடவுள் தன்மை வாய்ந்தவர்களாலுமே தான் எழுதப்பட்டவைகளெனவும், கடவுளின் தன்மையையும், கடவுள் சக்தியையும், கடவுள் கட்டளைகளையுமே தான் அவைகள் தம்முள் அடக்கிக்கொண்டிருக்கின்றனவென்றும்; அவைகள் சம்பூரணமானவைகளெனவும், பரிசுத்தம் வாய்ந்தவைகளெனவும், அவைகளில் கூறப்பட்டிருப்பவைகள் யாவும் உண்மையைத் தவிர்த்து பிறிதொன்றுமில்லையெனவும்; மக்களின் சன்மார்க்க முறைகளுக்கு அவைகள் அஸ்திவாரமாக இருந்துவருவதுடன், மத சம்பந்தமான உண்மைகளுக்கு மூலபீடமாக இருந்து வருபவைகளெனவும்; மக்களின் வாழ்க்கைக்கும், முயற்சிகளுக்கும், பிரயத்தனங்களுக்கும் அவைகள் தான் பெரும் உதவி அளித்துக் கொண்டு வருகின்றவைகளெனவும்; பூலோக வாழ்க்கையில் மக்கள் ஆசைப்பட்டு, அகப்பட்டு, சிக்குண்டு' தத்தளியாது, பரலோக கைங்கரியங்களில் ஈடுபட்டு, மோட்ச லோகத்தையடைவதற்கு ஓர் வழி காட்டியாகவும், ஊன்றுகோலாகவும் அவைகள் இருந்துவருவதாகவும் நாம் போதிக்கப்பட்டு வருகின்றோம். நாம் நமது நடைமுறைகளிலும், உலகப்பழக்க வழக்கங்களிலும் நாள் தவறாது பார்த்தும், கவனித்துக் கொண்டும் வரக்கூடிய விஷயங்களுக்கும், மேலேகூறப்பட்டிருக்கும் கூற்றுகளுக்கும் கொஞ்சமும் சம்பந்தமென்பதின்றி, அவைகள் முற்றிலும் முரண்பாடுடையவைகளாகவும், அசம்பாவிதங்களாகவும் காணப்படுகின்றது. ஆகையால் தான் நடுநிலைமை வழுவாது ஆராய்ச்சி செய்பவர்களையும், அறிவுடையவர்களையும் அவைகளைத் தாக்கி, நிர்மூலமாக்க வேண்டுமென்பதற்காக அவர்களை யுத்த கோலம் பூணும்படி வற்புறுத்துகின்றது.

சைவர்கள் வைஷ்ணவ மத சம்பந்தமான புஸ்தகங்களை வாசிக்குந்தோறுமாவது, அல்லது மகமதிய மத சம்பந்தமான புஸ்தகமாகிய குர்ஆனை வாசிக்குங்காலையிலும், அல்லது கிறிஸ்து மத சம்பந்தமான புஸ்தகமாகிய விவிலிய நூலை (பைபிளை) வாசிக்கநேர்ந்தாலும் அப்பொழுது அவர்கள் அப்புஸ்தகங்களில் காணப்படும் விஷயங்கள்யாவும், அசம்பாவிதமானவைகளெனவும், ஒரு காலத்திலும் நடைபெற்றிருக்காதெனவும், அவ்வளவும் சுத்தப்பொய்யேயன்றி சிறிதேனும் உண்மையென்பது அப்புஸ்தகங்களில் மருந்துக்காகத்தேடினும் அகப்படாதெனவும், ஏனைய மதங்களைத்தூற்றவும், தங்கள் தங்களுடையமதத்தைப் புகழ்ந்துரைக்கவுமே அவைகள் எழுதப்பட்டிருப்பவைகளெனவும், காலப்போக்கிற்காக வேண்டிமட்டிலும் அவைகளைப்படிக்கலாமேயல்லாது, மற்றப்படி அப்புஸ்தகங்களைக் கற்பதால் பிரயோசனமொன்றுமில்லையெனவும் கூறுகின்றார்கள். இவ்வாறே தான் வைஷ்ணவர்களும், முகமதியர்களும், கிறிஸ்துவர்களும் தங்கள் தங்களுடைய மத சம்பந்தமான புஸ்தகங்களைத்தவிர்த்து ஏனைய மத சம்பந்தமான புஸ்தகங்களைப்பற்றி குறைகூறுகின்றார்கள். ஆனால் இவர்கள் யாவரும் ஒரே குரலுடன், தத்தம் மத சம்பந்தமானபுஸ்தகங்களில்காணப்படுபவைகளைமட்டும் யாதொரு வித சங்கோசமோ, சந்தேகமோ ஆக்ஷேபணையோ அல்லது கண்டனமோயின்றி அவைகளை அப்படியே அங்கீகாரம் செய்து, ஒத்துக்கொள்ளுவதுடன், அப்புஸ்தகங்களில் கூறப்பட்டிருப்பவைகளனைத்தும் உண்மையெனவும் கூறி, வாதாடுகின்றனர். இவர்களுடைய அறிவுக்கு இதர மத புஸ்தகங்களில் காணப்படும் ஊழல்களும், குற்றங்களும், தோஷங்களும் அகப்படுகின்றதேயல்லாது, தங்கள் தங்களுடைய மத புஸ்தகங்களில் காணப்படும் ஊழல்களும், குற்றங்களும், தோஷங்களும், அசம்பாவிதங்களும் அகப்படுவதேயில்லாதிருப்பதுடன், அவைகளில் கூறப்பட்டிருப்பவைகள் யாவும் உண்மையெனவும் கருதிவருகின்றனர்.

நாம் யாவரும் சகஜமாகவே கல்பனாகதைகளிலும், கட்டுக்கதைகளிலும் பரவசமடைகின்றோம். அவைகளின் வர்ணிப்புகளைக்கண்டு மயங்கிவிடுகின்றோம். அவைகளைப்படிப்பதற்கும் ஆசையும், அவாவுமுறுகின்றோம். ஆதிகாலத்திய பழங்கதைகளை நாம் படிக்குந்தோறும், மக்களை சதாகாலமும் வாட்டிக்கொண்டுவரும் கேள்விகளாகிய 'நாம் எங்கிருந்து வருகின்றோம்', 'நாம் எங்கு செல்லுகின்றோம்' என்பவைகளைக்குறித்து பல்வேறு மகான்களும், மகரிஷிகளும் ஆராய்ந்ததாகவும், இக்கேள்விகளுக்கு அவர்கள் விடைதெரிந்து கொள்ளுவதற்காக வேண்டி தங்களுடைய ஆயுட்காலமுழுவதையும் செலவிட்டதாகவும், அக்காலங்களில் அவர்கள் தங்களுடைய சுகத்தைக் கவனியாது, பா[illegible]களின் இன்பத்திற்கும், சுகத்திற்குமாகவேண்டி அநேக கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும், இடையூறுகளுக்கும் ஆளாகியதாகவும் நாம் பார்க்கின்றோம். ஆனால் இவர்களுடைய இம்மாதிரியான தியாகங்களினால் மக்களுக்குச் சாஸ்வதமான பிரயோஜனமேதாகிலும் உண்டா என்று கவனிப்போமானால் அப்பொழுதுதான் எல்லாம் குதிரைக்கொம்பாகவே முடிவடைந்திருப்பதையும் நாம் பார்க்கின்றோம்.

இவர்களால், மக்களின் நன்மையைக்கருதியே, எழுதிவைத்திருப்பதாகக்கூறப்படும் கல்பனாகதைகள் யாவும் ஓர்விதநம்பிக்கையாலும், பயத்தாலும், இன்பத்தாலும், துன்பத்தாலுமேசிருஷ்டிக்கப்பட்டு, மக்கள் ஜனனத்திலிருந்து மரணவாயிலையடையும் வரையிலும் அவர்களுடைய ஜீவியத்தில் அவர்களுக்கேற்படும் பல்வேறு இன்பங்களையும், துன்பங்களையும் தழுவிஎழுதியிருப்பதாகக் காணப்படுகின்றது. இவர்கள் இத்துடன், இதுவரையிலும் நின்றார்களாவென கவனிப்போமாகில், அதுவும் இல்லை. தங்களைப்படைத்ததாகவும், உண்டாக்கியதாகவும், இவர்களால் கருதப்பட்டுவரும் தங்களுடைய கடவுளுக்கும், மக்களுக்கு சகஜமாகவே உண்டாயிருக்கக்கூடிய பேதாபேதங்களும், குணதோஷங்களும், விகல்பங்களும் கடவுளுக்கும் உண்டு யென்பதாகவும் பறை சாற்றி விட்டார்கள். மேலும், இவர்களால் பாவிக்கப்பட்டுவரும் கடவுளுக்கு வாயுவும், அலைகளுந்தான் சங்கீதக்கருவிகளெனவும், சங்கீதமெனவும் கற்பிக்கப்பட்டதோடு, ஏரிகளிலும், நதிகளிலும், ஊற்றுகளிலும், மலைகளிலும், வனங்களிலும், கமகமவென வாசனை வீசக்கூடிய எல்லாவிடங்களிலுமோதன் அக்கடவுள்வாசம் செய்வதாகவும் மக்களுக்குப்போதித்து விட்டனர். (ஒருக்கால் இதையுத்தேசித்துத்தான் கோவில்களிலும், சாமிகும்பிடும் அறைகளிலும்சாம்பிராணியைபுகைத்து கர்ப்பூரத்தையும், ஊதுவத்திகளையும் கொளுத்தி, புஷ்பங்களால் உருவங்களை அலங்கரித்து, வாசனையைபளிக்கத்தக்க எண்ணெய்களுடன் சந்தனத்தைக்கரைத்து சாமிகளின் பேரிலும், அறைகளிலும்

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

வெளிநாட்டுச்சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

மலேயா, சைகோன், ஆப்ரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பும் பத்திரிகைகளின் தபால்கட்டணம் அரையணாவிலிருந்து முக்காலணாவாக உயர்த்தப்பட்டிருப்பதால் டிசம்பர் மாதத்திலிருந்து நமது "குடி அரசின்" வெளிநாட்டு சந்தா ரூபாய் நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

பிரிண்டர் அன்ட் பப்ளிஷர்
குடி அரசு ஈரோடு.

குடி அரசு

ஈரோடு 1932 ஜனவரி௴ 3உ

தலைநகரும் பிடிபட்டது.

ஒரு நாட்டு மக்களைச் சீர்திருத்த வேண்டுமானால்—அவர்களிடமுள்ள மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால் — அவர்களிடமுள்ள சாதி சமய பேதங்களை ஒழித்துச் சகோதரர்களாக ஒற்றுமையுடன் வாழச்செய்யவேண்டுமானால் தைரியமாக அவர்களிடம் குடி கொண்டிருக்கும் குற்றங்களை எடுத்துக்காட்டவேண்டும். இவ்வாறு தேசமக்களிடம் படிந்து கிடக்கும் குற்றங்களை அவர்களுடைய எதிர்ப்பையும், வெறுப்பையும் எதிர்பாராமல் எடுத்துக்காட்டுவதன் மூலந்தான் அவர்களைச் சீர்திருத்தஞ் செய்ய முடியும். தேசத்தின் நன்மைக்கு மக்களுடைய சீர்திருத்தத்திற்கு எந்தெந்தக்காரியங்களை ஒழிக்கவேண்டும், எந்தெந்தக்காரியங்களைக் கைக்கொள்ளவேண்டும் என்னும் விஷயங்களைப்பகுத்தறிவுடன் ஆராய்ந்து, தம்மனத்திற்கு பட்டதைத் தைரியமாக ஜன சமூகத்திற்கெடுத்துக்கூறும் தலைவர்களால் தான்—இயக்கங்களால் தான் எந்தத்தேசமும்முன்னேற்றமடைய முடியும்.

இவ்வாறில்லாமல், மக்களுடைய பழக்க வழக்கங்களுக்கு - அவர்களுடைய பழய கொள்கைகளுக்கு விரோதமான அபிப்பிராயங்களை வெளியிட்டால்பொது ஜனங்கள் நம்மை எதிர்ப்பார்கள்; அவர்களிடம் நாம் தலைவர்களாக விளங்க முடியாது; பொது ஜனங்களால் நாம் தூஷிக்கப்படுவோம் என்று பயந்து கொண்டு அவர்கள் அனுசரித்துவரும் மூடப்பழக்க வழக்கங்களுக்கு ஆதரவளித்துக்கொண்டே சீர்திருத்தஞ் செய்ய முயலும் தலைவர்களாலும், இயக்கங்களாலும் ஒரு சீர்திருத்தமும் செய்ய முடியாது என்பது சீர்திருத்தவாதிகளின் முடிவான அபிப்பிராயமாகும்.

இந்த அபிப்பிராயத்துடன் நமது நாட்டில் உள்ள தலைவர்களின் போக்கையும், இயக்கங்களின் நடத்தைகளையும் கவனித்தால் அநேகமாக எல்லாத்தலைவர்களும், எல்லா இயக்கங்களும் பாமர மக்களின் மூடப்பழக்க வழக்கங்களுக்கு விரோதமான பிரசாரத்தைத் தாராளமாகவும், அஞ்சாமலும் செய்வதில்லை என்பது விளங்கும். ஆனால் தேசமக்களின் முன்னேற்றத்திற்கு காலநிலையை அனுசரித்து எந்தக்காரியங்களைச் செய்வது சரியென்று படுகிறதோ அந்தக் காரியங்களை யாருடைய தயவுக்கும், தாட்சண்யத்திற்கும்கட்டுப்படாமல், இதுவரையிலும் பகுத்தறிவுக்குப்பொருத்தமான—பொதுஜனங்களின் மூடப்பழக்க வழக்கங்களுக்கு விரோதமான—சிறந்த கொள்கைகளை ஆண்மையுடன் வெளியிட்டுவருவது நமது இயக்கம் ஒன்றேயாகும்; நமது இயக்கத்தோழர்களே யாவார்கள்; என்பது நமது நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும்.

இம்மாதிரியான சீர்திருத்த அபிப்பிராயங்களைப்பாமர மக்களிடம் பரப்பிவருவதனால் அவர்களை இதுவரையிலும் ஏமாற்றிக் கொண்டிருந்த எல்லாகூட்டத்தாருக்கும் நமது இயக்கத்தின் மேலும், நமது இயக்கத்தோழர்களின் மேலும், குரோதமும், பொறாமையும் ஏற்பட்டு நமது இயக்கத்தைப்பற்றியும், நமது இயக்கத் தோழர்களைப்பற்றியும் பலவகையான தப்புப்பிரசாரங்கள் செய்துவருகின்ற விஷயம் குடி அரசு வாசகர்களுக்கெல்லாம் நன்றாய்த்தெரிந்த செய்தியாகும்.

முக்கியமாக நமது இயக்கத்தின்மேல் துவேஷத்தைக்கற்பித்துப்பொது ஜனங்களிடத்தில் பிரசாரம் பண்ணுகிறவர்கள் பிச்சை வாங்கும் புரோகிதக்கூட்டத்தாராகிய பார்ப்பனர்களும், அவர்களுடைய வார்த்தைகளையும், அவர்களுடைய பிழைப்புக்கு ஆதாரமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் 'மதம், வேதம், புராணம், சுவர்க்கம், நரகம், கடவுள், மோட்சம்' என்னும் புரட்டுக்களின் மேல் நம்பிக்கைகொண்டிருக்கும் பகுத்தறிவற்ற ஏமாந்த சோணகிரிகளாகிய சிலபார்ப்பனரல்லாதார்களும், கூலிக்குமாரடிக்கும் சிலகாலிகளுமே ஆவார்கள்.

பார்ப்பனர்களின் ஆதிக்கம் பெற்று விளங்கும் தேசியப்பத்திரிகைகள் என்பனவும், வயிற்றுப்பிழைப்புக்காக ஏற்பட்ட மற்றும் சில கூலிப்பிரசாரக்குட்டிப்பத்திரிகைகளும், நமது இயக்கத்தின் பேரிலும், தோழர்களின் மேலும், பல ஆதாரமற்ற அற்பத்தனமான அபாண்டமான பழிகளைச்சுமத்திப் பாமரமக்களிடம் பொய்ப்பிரசாரம் பண்ணிக் கொண்டிருக்கின்றன என்பதும் வாசகர்களுக்குத்தெரியாத செய்தி அல்ல.

நம்மைப்பற்றி சுய நலக்காரர்களும், மோசக்காரர்களும், கூலிக்காரர்களும், அயோக்கியர்களும், அவதூறுப்பிரசாரம் பண்ணிக் கொண்டிருந்தாலும் நமது இயக்கம் நாளுக்கு நாள் பொதுஜனங்களின் மனத்தில் ஆழமாக ஊன்றி அவர்களைத்தட்டி எழுப்பி உற்சாகப்படுத்தி வருகின்றன என்பதை எந்த எதிரிகளும் மறுக்க முடியாது.

இதற்கு உதாரணம் அடுத்தடுத்து பல இடங்களில் ஜில்லாமகாநாடுகளும், மாகாணமகாநாடுகளும், தாலூகா மகாநாடுகளும் நடந்து வருவதைக்கொண்டே அறியலாம். சென்ற 1931ம் வருஷத்தில் தூத்துக்குடியில் ஒரு மகாநாடும், காரைக்குடியில் ஒரு மகாநாடும், பொறையாற்றில் ஒரு மகாநாடும், நன்னிலத்தில் ஒரு மகாநாடும், லாலுகுடியில் இரண்டு மகாநாடுகளும், விருதுநகரில் பல மகாநாடுகள் சேர்ந்த ஒரு மாகாணமகாநாடும், திருவாரூரில் ஒரு மகாநாடும், சென்னையில் பலமகாநாடுகள் சேர்ந்த ஒரு மகாநாடும் ஆக 9 மகாநாடுகள் நடந்திருக்கின்றன. கணக்கிட முடியாத பொதுக்கூட்டங்களும் நடந்திருக்கின்றன. இந்த மகாநாடுகளெல்லாம் மந்திரிகளுடைய தயவைக்கொண்டோ, ஸ்தலஸ்தாபனத் தலைவர்களின் தயவைக்கொண்டோ, ஜமீன்தார்களுடைய தயவைக்கொண்டோ, பெரிய பணக்காரர்களுடைய தயவைக்கொண்டோ நடைபெறவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். இதைக்கொண்டு நம்மை, அரசாங்கத்தின் தயவை நாடுகிறவர்களென்றும், உத்தியோகஸ்தர்களின் தாசர்களென்றும், நமது எதிரிகள் பிதற்றித்திரிவது வீண் புரட்டு என்பதை உணரலாம். ஆனால், பொதுஜனங்களின் ஊக்கத்தினாலும், வாலிபர்களின் முயற்சியாலுமே மேற்கூறிய நமது மகாநாடுகள் யாவும் நடைபெற்றன என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். இந்த மாதிரி வேறு எந்த இயக்க மகாநாடுகளும், நடந்ததில்லை, நடப்பதில்லை என்று தைரியமாகச்சொல்லுவோம். இந்த மகாநாடுகளில், சென்ற 26, 27-12-31ந் தேதி சனி ஞாயிறு களில், சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நமது சுயமரியாதை மகாநாட்டைப்பற்றி இப்பொழுது கவனிப்போம். மற்ற மகாநாடுகளைப்பற்றிய விஷயங்களை அவ்வப்போது, நமது பத்திரிகையில் எழுதி வந்ததைப் படித்திருப்பீர்கள்.

நமது மகாணத்தின் தலை நகரமாகிய சென்னையில் நமது இயக்கம் ஆரம்பித்த நாள்முதல் இதுவரையிலும் நமது இயக்க சம்பந்தமாக ஆங்காங்கே பல சமயங்களில் பல பொதுக்கூட்டங்கள் நடந்ததைத் தவிர, சுயமரியாதை இயக்கத்தின் பேரால் ஒரு மகாநாடேனும் நடந்ததில்லை. இதற்குக் காரணம், நமது இயக்கப் பிரசாரம், அங்கு சரிவர நடத்தப்படாததும், நமது இயக்கத்தின் உண்மையான கொள்கைகள் பொது ஜனங்களுக்குத் தெரியாததும், இக்காரணங்களால் சென்னை நகரப் பொது ஜனங்களின் எண்ணம் நமது இயக்கத்தில் திரும்பாததுமே ஆகும் என்பதை நாம் தாராளமாக மறைக்காமல் ஒப்புக் கொள்ளுகிறோம்.

சென்னை நகர மக்களிடம் ஆங்கில நாகரிகம் எவ்வளவு குடிகொண்டிருக்கிறதோ அதைவிடப்பதினாயிரம் மடங்கு அதிகமாக மூடப்பழக்க வழக்கங்கள் அவர்கள் இரத்தத்தில் ஊறிப்போயிருக்கின்றன என்பதைச் சென்னை நகரத்தில் சிறிது அநுபவமுடையவர்களும் அறிவார்கள். அவர்கள் கொண்டாடாத பண்டிகைகளும், கும்பிடாத சாமிகளும், செய்து கொள்ளாத பிரார்த்தனைகளும், அநுஷ்டிக்காத விரதங்களும், நம்பாத மூட நம்பிக்கைகளும், செய்யாத புரோகிதச்சடங்குகளும், தரித்துக்கொள்ளாத மதவேஷங்களும், நமதுமாகாணத்தில் வேறு எந்தப்பாகத்திலும் இல்லவே இல்லை, சர்வ கலாசா

லைப்பட்டங்கள் பெற்றவர்கள் முதல், எழுத்துவாசனை அறியாத பாமரர்கள் வரையில் இந்நிலைமையில் கொஞ்சமும் வித்தியாசம் இல்லாதவர்கள். அரசாங்க மந்திரிகள் முதல் தெருக்கூட்டும் தோட்டிகள் வரையில் எல்லோரும் இந்த நிலைமையிலேயே இருக்கிறவர்கள். உதாரணமாக ஒன்றே ஒன்று சொல்லுகிறோம். கால்சட்டை, மேல்சட்டை, கழுத்துச்சுருக்கு, காலில் பூட்சு முதலியவைகளை நாகரீகமாக அணிந்திருப்பதோடுங்கூட காதில் வயிரக்கடுக்கன்களும், கைகளில் காப்புகொலுசுகளும், நெற்றியில் பட்டை நாமங்களும், கழுத்தில் அங்கவஸ்திரமும் அணிந்திருக்கும், வைதீக நாகரீகஸ்தர்களைச் சென்னை நகரில்தான் காணலாம். இந்த அலங்கோலமுள்ள நாகரீகத்தை வேறு எந்த இடத்திலும் காண முடியாது. இத்தகைய மக்கள் நிறைந்த இடத்தில் பொதுஜனங்களின் பெரிய தாராளமான ஆதரவாலும், முயற்சியாலும் பெண்கள் மகாநாடு, தொண்டர் மகாநாடு இவற்றுடன் கூடிய ஒரு சுயமரியாதை மகாநாடு நடப்பதென்றால் நமது இயக்கம் பொது ஜனங்களின் கவனத்தை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறதென்பதை யோசித்துப் பாருங்கள். இனி அம்மகாநாட்டின் நிகழ்ச்சிகளைச்சிறிது கவனிப்போம்.

மகாநாடு நடந்த இரண்டு தினங்களிலும், நமது இயக்கத்தோழர்கள் செய்த ஒவ்வொரு பிரசங்கங்களையும், மண்டபங்கொள்ளாமல் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும், அளவற்ற சந்தோஷத்தோடும், ஊக்கத்தோடும், மூடப்பழக்கங்களை ஒழிக்க வேண்டும் என்னும் ஆவேசத்துடனும அப்படியே ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தகுந்ததாகும். மகாநாட்டில் தலைமை வகித்தவர்களும், பேசியவர்களுமான ஒவ்வொரு தோழர்களும் நமது இயக்கக்கொள்கைகளை சென்னை நகர மக்களின் கண்கள் திறக்கும்படி விளக்கமாக அஞ்சாமல் ஆண்மையோடும், ஊக்கத்தோடும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

நமது இயக்கம், நமது மக்களாகிய ஆண்பெண்கள் அனைவரும் சம சுதந்தரம் பெற்று உலக வாழ்வில் உயர்வு தாழ்வில்லாத இன்பத்தை அனுபவித்து வர வேண்டுமென்பதற்காகவே பாடுபடுகின்றது என்னும் விஷயம் சுயமரியாதை இயக்கத்தின் உண்மையை அறிந்தவர்களுக்கெல்லாம் தெரிந்த செய்தியாகும். இதற்குத்தடையாக இருப்பவைகளான பார்ப்பன ஆதிக்கம், புரோகிதப்புரட்டு, வேத புராண இதிகாச சாஸ்திரங்கள், அவைகள் மேல் உள்ள நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை இவற்றுக்கெல்லாம் காரணமான ஆத்மா நம்பிக்கை ஆகியவைகள் அடியோடு ஒழிய வேண்டும் என்று கூறுகின்றோம். இந்தவிஷயங்களை அஸ்திவாரமாகக்கொண்டு கட்டப்பட்ட எல்லா மதங்களும் வேரோடு, அடியோடு கிளையோடு வீழ்ந்து மாள வேண்டும் என்று சொல்லுகின்றோம்.

மதங்கள் ஒழிந்தால் சாதிகள் ஒழியும்; மூடநம்பிக்கைகள் யாவும் ஒழியும்; எல்லோரும் அரசியலில் சமத்துவம் பெறலாம்; ஏழைகள் துயரம் நீங்கும்; ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் உள்ள மலைக்கும் மடுவுக்கும்போன்ற வித்தியாசம் ஒழியும் என்று சொல்லிவருகின்றோம். நமது மக்களின் உயர்வு தாழ்வுக்கும் ஒற்றுமைக்குறைவுக்கும் காரணமாயிருப்பவைகளையெல்லாம் ஒழிக்காமல் அவற்றைப்பாது காத்து நிலைநிறுத்தப்பாடுபடும் காங்கிரஸ் முதலிய இயக்கங்களை ஒழிக்க வேண்டுமெனக்கூறுகின்றோம். இவ்விஷயங்களையெல்லாம், சுயமரியாதை மகாநாட்டைத்திறந்து வைத்த தோழர் சிங்காரவேலு அவர்கள் பிரசங்கத்திலும், வரவேற்புத்தலைவர் தோழர் லட்சுமி நரசு அவர்கள் பிரசங்கத்திலும், தலைவர்தோழர் பார்த்தசாரதிஅவர்கள் பிரசங்கத்திலும், பெண்கள் மகாநாட்டைத் திறந்து வைத்த சகோதரி, கிரிஜாதேவிஅவர்கள்பிரசங்கத்திலும், வரவேற்புத் தலைவர், சகோதரி, குஞ்சிதம் அவர்கள் பிரசங்கத்திலும், தலைவர், சகோதரி, அன்னபூரணி அவர்கள் பிரசங்கத்திலும், தொண்டர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர், சகோதரி சகுந்தலா அவர்கள் பிரசங்கத்திலும், தலைவர், சகோதரி இந்திராணி பால சுப்பிரமணியம் அவர்கள் பிரசங்கத்திலும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இந்த மகாநாட்டினால் சென்னை வாசிகள் அனைவரும், காங்கிரஸ், மக்களின் சாதி, மத, பழக்க வழக்கக்கொடுமைகளைப்போக்கி அவர்களை உண்மையான சுதந்தரமுடையவர்களாகச் செய்யக்கூடிய ஸ்தாபனம் அல்லவென்றும், இத்தகைய விடுதலையைத்தருவது சுயமரியாதை இயக்கமே என்றும் தெளிவாக உணர்ந்துகொண்டார்களென்று கூறலாம். 'காங்கிரஸ் ஒன்றே விடுதலையளிக்கும் ஸ்தாபனமாகும். ஆகையால் எல்லோரும் காங்கிரசிலேயே சேரவேண்டும். இனி பார்ப்பனரல்லாதார் கட்சி, சுயமரியாதைக்கட்சி முதலியவைகள் நமது நாட்டிற்குத் தேவையல்ல' என்று பலர் பிரசாரம்பண்ணியதன் புரட்டையும் சென்னை வாசிகள் அறிந்துகொண்டார்கள் என்றே சொல்லுவோம்.

சென்னை மகாநாட்டில் இப்பிரசங்கங்களில் தோழர். சிங்காரவேலு அவர்களின் பிரசங்கத்தில் உள்ள இரண்டொரு விஷயங்கள் மாத்திரம் நாம் ஒப்புக்கொள்ள முடியாதவை என்பதை இச்சமயத்தில் கூறாமல் இருப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு உதாரணமாக ஒரு விஷயத்தை மாத்திரம் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

நமது இயக்கக் கொள்கைகளில், ஜாதிகளையும், மதங்களையும், சடங்குகளையும் ஒழிக்கக் கலப்புமணம் அவசியமானது என்பதும் முக்கியமானதொன்றாகும். இவ்விஷயம் சீர்திருத்தவாதிகள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விஷயமும் ஆகும். ஆனால், தோழர். சிங்காரவேலு அவர்கள் தமது பிரசங்கத்தில், "நமது தேச ஜாதி கலப்பு மணத்தால் ஒழியும் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் கலப்புமணம் செய்துகொண்டவர்கள் தனிப்பட்ட ஒரு ஜாதியாகின்றார்கள். இந்த விதங்களால் இன்னும் ஜாதிகள் வளர்ந்து வருகின்றன" என்று கூறியிருப்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. தற்போது, கலப்புமணம் செய்து கொள்ளுகின்றவர்கள் குறைவாயிருப்பதனாலும், கலப்பு மணஞ் செய்து கொள்ளுவதனால் பாதகம் இல்லை என்ற எண்ணம் நமது மக்களிடம் உண்டாகாததனாலும், இவர்கள் தனி ஜாதியாக இருப்பதைப்போலக் காணப்படுகின்றார்களேயொழிய உண்மையில் இவர்கள் தனிஜாதியாராக இல்லை. கலப்புமணம் அதிகப்பட அதிகப்பட, ஜாதியென்னும் பாறை தூள் தூளாகச் சிதறி, பொடியாகப் பறந்துபோய்விடும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜாதி, மதம், சடங்குகள் என்னும் பாறைகளை உடைத்துத் தூளாக்கிப் பறக்கச் செய்யும் கருவி கலப்பு மணத்தைவிட வேறொன்றும் இல்லையென்பதே நமது இயக்கத்தின் அபிப்பிராயமாகும்; இது கல்வியினாலும் ஆகும். அந்நியநாட்டில் உள்ள பல மேதாவிகளும், நமது நாட்டிலுள்ள பல பேரறிஞர்களும் இதையே வற்புறுத்தி வருகிறார்கள்.

சென்னைச் சுயமரியாதை மகாநாட்டில், காங்கிரஸ், காந்தி, ஹிந்தி முதலியவைகளைக் கண்டித்தும், செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர் மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்தும் யாதொரு எதிர்ப்புமின்றிப்பொது ஜனங்களின் ஏகமனதான அபிப்பிராயத்துடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதனால் சென்னைப் பொது ஜனங்கள், காங்கிரஸ் பித்தலாட்டங்களையும், சுயமரியாதை இயக்கத்தின் உண்மையான கொள்கைகளையும் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறலாம்.

சுயமரியாதைப்பெண்கள் மகாநாட்டில் நிறைவேறியுள்ள தீர்மானங்களும், பெண்களின் சமத்துவத்திற்கும்,சுதந்தரத்திற்கும் பெரிதும்ஏற்றதாகவேயிருக்கின்றன. சென்ற 28-12-31ல் சென்னை "செனட்" மண்டபத்தில், இந்தியப்பெண்கள் மகாநாடு சகோதரி பி. கே. ராய் அவர்களின் தலைமையில் நடந்தது. அம்மகாநாட்டின் வரவேற்புத்தலைவர்சகோதரி நாசிர் உசெய்ன் அவர்கள். இவ்விருவர் பிரசங்கங்களும், பெண்கள் சுதந்தரத்திற்கான விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றன. அம்மகாநாட்டிலும்,பெண்கள்சுதந்தரத்திற்கும், சமத்துவத்திற்கும் ஏற்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

ஆனாலும் அத்தீர்மானங்களைக் காட்டிலும், அம்மகாநாட்டிற் பேசியவர்களைக்காட்டிலும்,நமது சுயமரியாதைப் பெண்கள் மகாநாட்டுத் தீர்மானங்களும், பேச்சுக்களும் முற்போக்குடையதாக, இருக்கின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது. நமது சுயமரியாதைப் பெண்கள் மகாநாட்டில், பெண்களின் அடிமைக்கு முதற் காரணமாக இருக்கின்ற மதங்கள் ஒழியவேண்டும் என்றே எல்லாச் சகோதரிகளும் கர்ஜித்தார்கள். இந்த வாசனையானது கொஞ்சங்கூட "செனட்" மண்டபத்தில் நடந்த இந்தியப் பெண்கள் மகாநாட்டில் வீசவில்லை என்பதை அந்த மகாநாட்டு நிகழ்ச்சிகளைப் படித்தவர்களும், பார்த்தவர்களும் அறிவார்கள். ஆயினும், வயதேறிய மத நம்பிக்கையுள்ள

பல பெண் மக்கள் கூடிய இந்தியப் பெண்கள் மகாநாட்டில், பலத்த விவாதத்தோடும், திருத்தத்தோடும் பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருப்பதை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். மற்றும், பெண்கள் சுதந்தரத்திற்காக நிறைவேற்றப்பட்டிருக்கும் எல்லாத் தீர்மானங்களையும் பாராட்டுகிறோம்.

இனி நமது சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டைப் பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டியதில்லை. இவ்வளவு தூரம், நமது நாட்டில், சுயமரியாதை இயக்கம் பரவவும், பொது ஜனங்கள் இவ்வியக்கக் கொள்கைகளை உணர்ந்து கண்விழிக்கவும் செய்தவர்கள் சுயமரியாதைத் தொண்டர்களாகிய தோழர்களே யென்பதை யாரும் மறுக்கமுடியாது. இத்தோழர்களின் இடைவிடாத — சுயநலங்கருதாத — யாருடைய தயவு தாட்சண்யங்களுக்கும் கட்டுப்படாத உழைப்பினால் தான் நமது இயக்க சம்பந்தமான இத்துணை மகாநாடுகளும், கூட்டங்களும் நடைபெறுகின்றன என்பதை யாரும் அறிவார்கள். ஆகவே, அவர்கள் மகாநாட்டில் பேசிய பேச்சுக்கள், நமது இயக்கத்தை இன்னும் அதிதீவிரமாக நாடு முழுதும் பரவச்செய்து பொது ஜனங்களை ஏமாறாமல், எழுப்பிவிடக்கூடியனவாகவே யிருந்தன. அப்பேச்சுக்களையும், அப்பேச்சாளர்கள் எடுத்துக்காட்டிய உண்மைகளையும் ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கேட்ட கிழவர்கள் முதல் வாலிபர் வரை ஆண் பெண்கள் அனைவரும் மதப்புரட்டு, காங்கிரஸ் புரட்டு, வைதீகப் புரட்டு, சடங்குப் புரட்டு முதலியவைகளை விளக்கமாகத் தெரிந்து கொண்டு அடக்கிய சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர்.

கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் கூறி முடிக்கிறோம். நமது தலைவர் ஈ. வெ. ராமசாமி அவர்கள்; உடல் நலம் இல்லாமல் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தவுடன் மனிதத் தன்மையற்றபேடிகள் சிலரும் "சிவநேசர்கள்" என்றும், "தேசியவாதிகள்" என்றும், "சைவப்பெரியார்கள்" என்றும் பெயர்வைத்துக் கொண்டிருக்கும் அயோக்கியர்கள் சிலரும் 'ஈ. வெ. ராமசாமி இப்படியே எப்பொழுதும் ஓய்வெடுத்துக்கொண்டு வேறு உலகம் போய்விட வேண்டும். போய்விட்டால் நாடு நன்மையடையும்" என்று மூட்டாள் தனமாகவும், சிறிதும் உலகஞானமில்லாமலும் பத்திரிகைகளில் எழுதினார்கள். தங்கள் சாமிகளை வேண்டிக்கொண்டார்கள். பிறகு ஈ. வெ. ராமசாமியும், தோழர் எஸ். ராமநாதனும் ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் போயிருக்கின்றதை அறிந்ததும் அப்பேடிகள் ஆனந்தக்கூத்தாடினார்கள். நமது இயக்கம் செத்துப்போய்விடும்; தங்கள் வயிற்றுப்பிழைப்பு நாடகத்தை யாதொரு விக்கினமும் இல்லாமல் நடத்திப்பொது ஜனங்களை ஏமாற்றலாமென்று கும்மாளம் போட்டார்கள். ஆனால் இந்தக் கையபேடிகளின் அடிவயிற்றில் நெருப்பு எரியும்படி நமது மகாநாடு சென்னையில் வெற்றிகரமாக பொது ஜனங்களின் தாராளமான ஆதரவுடன் நடைபெற்றது. இதிலிருந்தாவது நமது எதிரிகளாகிய வயிற்றுப்பிழைப்புக் காரர்கள், நமது இயக்கம் பொது ஜன இயக்கம் என்பதையும், தலைவர்கள் சுயநலத்திற்கான இயக்கம் அல்லவென்பதையும் உணர்ந்து வாயடங்குவார்களென்று நினைக்கிறோம். கடைசியாக இந்தச்சென்னை மகாநாட்டை முன்னின்று நடத்திய நமது இயக்கத்தோழர்களையும், பொது ஜனங்களையும், நாம் பாராட்டுவதுடன், நமது தலைவர்களான ஈ. வெ. ராமசாமியும், எஸ். ராமநாதனும் ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருவதற்குள் இதுபோல இன்னும் பல மகாநாடுகளும் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

காலஞ்சென்ற மாணிக்க நாயக்கர்.

பெருந்தமிழறிஞரும், பிட்டயரான சூப்பரிண்டெண்டிங் இஞ்சினீயரும, சிவபுரிஜமீன்தாருமான திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் காலஞ்சென்ற செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைகிறோம். இவர் தமிழ் மொழியில், சிறந்த ஆராய்ச்சியுள்ளவராகவும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் ஊக்கமுடையவராகவும் இருந்தார், இவர் உயிரோடு இருந்திருந்தால், தமிழ் மொழிக்கு நன்மையும், பார்ப்பனரல்லாதாருக்கு நன்மையும் உண்டாயிருக்கக் கூடும். இந்த நன்மைகளை நமது மக்கள் அடைவதற்கில்லாமல் திடீரென்று மாரடைப்பு வியாதியால் இறந்தது, பெரும் நஷ்டமே யாகும். இவரை இழந்து வருத்தமடையும், அவர் மனைவிமார்களுக்கும், பெண்களுக்கும், சகோதரர் முதலிய உறவினர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சாமி. சிதம்பரனார்.

சாமி சிதம்பரனார் 3—1—32 முதல் பாபநாசம் போய்த்தங்கியிருப்பதால் இனி அவருடைய சொந்தத்திற்கு எழுதும் கடிதங்களை

சாமி சிதம்பரனார்,
தமிழ்ப்பண்டிதர்
விக்டோரியா போர்டுஹைஸ்கூல்
பாபநாசம், தஞ்சை ஜில்லா.

என்ற விலாசத்திற்கே எழுதும்படி தெரிவித்துக்கொள்ளுகிறார்.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

குடி அரசுக்கு எழுதும் வியாசங்கள், செய்திகள் கடிதங்கள், மணியார்டர்கள் ஆகிய எல்லாவற்றையும் பிரிண்டர் அண்ட் பப்ளிசர் 'குடி அரசு' ஈரோடு. என்ற விலாசத்திற்கே எழுத வேண்டுகிறோம்.

பிரிண்டர் & பப்ளிஷர்,

கோயமுத்தூர் முனிசிபல் எலக்ஷன்.

—:0:—

திவான்பகதூர், ஸி. என். இரத்தின சபாபதி முதலியார், திரு. எஸ். என். பொன்னையா கவுண்டர், ஆர். கே. வெங்கிடாஜலஞ் செட்டியார், அருணாசலஞ் செட்டியார், நஞ்சப்ப கவுண்டர் முதலியவர்கள் வெற்றி பெற்றார்கள். மற்றவர்கள் விபரம் அடுத்தவாரம் வரும். (நமது நிருபர்)

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வாரி இறைக்கின்றார்கள் போலும்!) இவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட இக்கதைகள் யாவும் பொய்யாகவோ அல்லது கட்டுக்கதைகளாகவோ இருந்த போதிலும் கூட, மிக்க அழகாகவே அவர்களால் அக்கதைகள் யாவும் வர்ணிக்கப்பட்டு உரைக்கப்பட்டிருக்கின்றமையால் அநேக காலங்களாக அவைகள் மக்களுக்கு ஓர்வித உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்து அவர்களுக்கு ஓர் தூண்டு கோலாகவுமிருந்து கொண்டே வந்திருக்கின்றது. ஆனால், இக்கதைகளில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும் உண்மைதானென வும்; கடவுளாலும், கடவுள் அருள்பெற்றவர்களாலும், கடவுள் தன்மை வாய்ந்தவர்களாலுமே தான் அவைகள் எழுதப்பட்டிருப்பதாகவும்; அக்கதைகளை ஒருவன் சந்தேகித்தாலோ, அல்லது மறுத்தாலோ அவன் ஏழேழு தலைமுறையும் ரௌரவாதி நரகத்திற்கே தான் ஆளாவான் எனவும் உரைத்து மக்கள் பயமுறுத்தப்பட்டிருப்பதனாலும், அக்கதைகள் எவ்வளவு அழகாக வர்ணித்துரைக்கப்பட்டிருந்த போதிலும்கூட, அவைகள் தங்களுடைய அழகை இழந்து, மக்களுடைய மனதில் ஓர்வித பயத்தையுண்டாக்கிவிடுகின்றது. மக்களும் ஓர்வித பயத்தினால் தான் அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள் போலவும், நடக்கின்றவர்கள் போலவும் காட்டிக்கொள்ளுகின்றார்களேயல்லாது, அக்கதைகளை வாசிப்பதால் அவர்களுக்கு உண்டாகும் பக்தியும், அறிவும்தான் அவர்களுடைய ஒழுங்கிற்கும், கட்டுப்பாட்டிற்கும் காரணமாயிருப்பதாக அவர்கள் காட்டிக்கொள்வதில்லை. இத்தகைய பயங்களாலும், பீதிகளாலும் மக்களுடைய மனது பாதிக்கப்படுவதால் அக்கதைகளின் அருமையும், பெருமையும் குலைவதோடு, அவைகளின் அழகும் குன்றிவிடுவதனால் தான் அறிவுடையோரும், ஆராய்ச்சியுள்ளோரும், தைரியமுள்ளோரும் அவைகளை வெறுத்து, ஒதுக்கித்தள்ளி வருகின்றார்கள்.

(தொடரும்)

புரோகிதமற்ற திதி.

நாகை ஆசீவர் மார்கட் மளிகை வியாபாரம், கோபால் அவர்கள் தனது தகப்பனார் இறந்த பதினாராம் நாள் கருமாதி யென்னும் மூடச்சடங்கை அறவேநீக்கி அன்றைய தினம் அன்னதானம் வழங்கினார்.

"சன்மார்க்கன்"
தமிழ் மாதப்பத்திரிகை.
பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர்:-
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

அதிர்ஷ்டம்! பிரசித்தி பெற்ற அதிர்ஷ்டம்!!

இங்கிலீஷ் குதிரைப்பந்தய லாட்டரி.

ம்யூட்சுவல்
டிஸ்டிரிப்யூஷன்ஸ்,
(வெளிநாடு)
ஆர். ஜே. டக்கன் லிமிடெட்,
உடன் இணைக்கப்பட்டது.

சுவிட்ஜர்லாந்துக்கு பக்கத்திலுள்ள லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டின் லைசென்ஸ் பெற்று கவர்ன்மெண்ட் பிரதிநிதி, போலீஸ் இவர்கள் மேற்பார்வையில் பத்திரிகை பிரதிநிதிகள், பொது ஜனங்கள் முதலியவர்கள் முன்னிலையில் நடைபெறுவது. சென்ற 11-வருஷங்களாக நடைபெற்றதில் 1,00,0000-பவுன்கட்கு மேல் பிரைஸ்களாக பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு சந்தாதாரருக்கும் தலைமை ஆபிசிற்கு அனுப்பப்பட்ட டிக்கட் நம்பர் லிஸ்டு, தலைமை ஆபீஸ் ரசீது, பிரைஸ் லிஸ்டு முதலியன அனுப்பித்தரப்படும்.

டிக்கட் 1க்கு விலை	பந்தயத்தின் பெயர்.	பரிசுகட்கும் கமிஷன் டிக்கட்டுகட்கும் பிரித்துக்கொடுப்பது.
தபால் செலவு உள்பட ரூ, 4-8.	**லின்கான்ஷயர் ஹேண்டிகேப்** 1932-ம் வருஷம் மார்ச்சு மாதம் 16-தேதியில் லின்காஷயரில் நடைபெறுகிறது:	பவுன் **120,000**

1-வது, 2-வது 3-வது பிரைஸ் வந்தவர்கட்கு தந்தி கொடுக்கப்படும்.

டிக்கட் மொத்தம் 400000.

பிரைஸ் விபரம் (விகிதாச்சாரம்)

100-க்கு 10 கமிஷன், செலவு, ஏஜண்டுக்குள்ள கமிஷன், கவர்ன்மெண்டு வரி முதலியவை போக அடியில் கண்டபடி பிரைஸ்கள் தரப்படும்.

			டிக்கட் விற்ற ஏஜண்டுக்கு			40 ரொக்க பிரைஸ்கள் பிரைஸ் 1க்கு பவுன் 200 வீதம்			
1-வது குதிரை	பவுன்	20000	1-வது குதிரை	பவுன்	1600	20	,,	,, 160	,,
2-வது ,,	,,	5600	2-வது ,,	,,	800	20	,,	,, 120	,,
3-வது ,,	,,	4000	3-வது ,,	,,	400	200	,,	,, 32	,,
மற்ற குதிரைகட்கு	,,	5600	மற்ற குதிரைகட்கு	,,	4000	300	,,	" 16	,,
பந்தயததில் சேராத குதிரைகட்கு	,,	3200							

முக்கிய குறிப்புகள்.

1. அதிகமாக டிக்கட் வாங்குபவர்கட்கு டிக்கட் 3-க்கு ரூ. 13 வீதமும், 6-க்கு ரூ 25-8-0 வீதமும், 12-க்கு ரூ. 49—8—0 வீதமும் கொடுக்கப்படும். அப்படி அதிகமாக வாங்கியவர்களின் டிக்கட்டில் ஏதாவது ஒன்றிற்கு 1-வது, 2-வது, 3-வது பிரைஸ் வந்தால் எமக்குக்கிடைக்கும் பிரைஸ் தொகையில் முறையே விற்ற டிக்கட்டை அனுசரித்து அவர்கட்கும் 100-க்கு 10-20-40 வீதம் கொடுக்கப்படும்.

2. டிக்கட்டில் கூட்டாகவும் சேரலாம், அவர்கட்கு கால் டிக்கட் ரூ. 1—5—0 வீதமும், அரை டிக்கட் ரூ. 2—8—0 வீதமும் கொடுக்கப்படும். கூட்டு டிக்கட்டிற்கு பணம் வந்து சேர்ந்ததும் விலாசத்தை பதிந்துகொண்டு அவர்கட்கு அவர்கள் சேர்ந்த டிக்கட்டின் நெம்பரைத்தெரிவிக்கப்படும். அந்நெம்பருக்குப் பிரைஸ்வரின் எம்மால் பகிர்ந்து தரப்படும். இந்த முறை ஏழைகட்கும் பயன்படும்.

3. சப் ஏஜண்டுகளுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும்.

சீட்டு எடுத்தல்.

நாங்கள் எமது கவர்ன்மெண்டின் லைசென்ஸ் பெற்று ம்யூட்சுவல் கிளப் லிமிடெட் நடத்தும் ஒவ்வொரு லாட்டரியும் குலுக்கி எடுக்கப்படும்போது எமது பிரதிநிதி நேரிலிருந்து மேற்பார்த்து வருகிறோர் என்பதையும், நடவடிக்கைகள் எந்த நிமிஷத்திலும் பொது ஜனங்கள் பரிசோதிக்க இடமுள்ளதாய், போலீஸ், பத்திரிகை பிரதிநிதிகள் முதலியவர்கள் முன் சரியாக தகுந்தபடி நடத்தப்படுகிறதென்பதையும் இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டுக்காக

(ஒப்பம்) FERDINAND NIGG,
காரியதரிசி.

வாடூஸ், 1930 செப்டம்பர் 3.

1930ல் "டெர்பி" பிரைஸ் சீட்டில் இந்தியாவில் "மங்களூர் பூ. கேசவாச்சாரியா" என்பவருக்கு 3-வது பிரைஸ் பவுன் 1500 கிடைத்திருக்கிறது.

இந்தியாவிற்கு ஒவ்வொரு முறையும் பல குதிரைகளும் ரொக்க பிரைஸ்களும் கிடைத்திருக்கின்றன. . . . .

1928-ல் "மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிக்கேப்" பிரைஸ் சீட்டில் இந்தியாவில் "இ. காண்டேஷ் அட்மாராம் ஈஸ்வரதாஸ்" என்பவருக்கு 1-வது பிரைஸ் பவுன் 5000 கிடைத்திருக்கிறது.

பிரைஸ் கொடுத்தல்.

நாங்கள் ம்யூட்சுவல் கிளப் லிமிடெட் வெளியிட்டுள்ள பிரைஸ் லிஸ்டுகள் எமது கவர்ன்மெண்ட் பிரதிநிதியால் சம்பந்தப்பட்ட லாட்டரிகளில் குறித்துக்கொள்ளப்பட்ட விபரங்களுடன் ஒத்துப் பார்த்ததில் சரியாக இருக்கிறதென்பதையும் பிரைஸ் தொகைகள் உரியவர்கட்கு அவர்கள் கேட்டமேல் கொடுக்கப்பட்டதற்கு உள்ள ஆதாரங்கள் எமக்கு காட்டப்பட்டன என்பதையும் இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டுக்காக
(ஒப்பம்) FERDINAND NIGG,
வாடேஸ், 1930 செப்டம்பர் 3. காரியதரிசி.

லீச்டென்ஸ்டன் மாகாண வியாபாரச்சங்க காரியதரிசி அபிப்பிராயம்.

ம்யூட்சுவல் கிளப் லிமிடெட் நடத்தும் குதிரைப்பந்தய லாட்டரி சந்தாதாரர்கள் எல்லோருக்கும் பூரண திருப்தி ஏற்பட்டிருக்கிறதென்பது, பிரைஸ் கிடைத்தவர்களுக்கு லட்சக்கணக்கான பவுன்கள் கொடுக்கப்பட்டதற்கு உள்ள ஆதாரங்களையும், உலகத்தின் பல பாகங்களிலிருந்து கிடைத்திருக்கும் நற்சாட்சி பத்திரங்களையும் எந்த ஆஸ்பத்திரி பொது ஸ்தாபனங்கள் முதலியவற்றின் அபிவிருத்திற்காக இது முதலில் நடத்தப்பட்டதோ அவைகளிடமிருந்து வந்துள்ள கடிதங்களையும் நான் பார்த்ததிலிருந்து எனக்குத்தெரிய வருகிறது. மற்ற பொது குதிரைப்பந்தய லாட்டரிகள் விளம்பர வெளியீடுகளிலிருந்து, ம்யூட்சுவல் கிளப் லிமிடெட் பிரைஸ் விஷயத்திலும் இதர நிபந்தனைகளிலும் ஏற்படுத்தியுள்ள தாராளத்தன்மையும் அனுகூலங்களும் நிகரற்றது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

நான் ம்யூட்சுவல் கிளப் சீட்டு குலுக்கும்போது அவ்விடத்தில் இருந்து எல்லா நடவடிக்கைகளையும் பார்க்க சந்தர்ப்பம் ஏற்பட்டது. விலாசங்கள் எழுதப்பட்டுள்ள டிக்கட்டுகளின் மறுபகுதிகள் ஒவ்வொரு முறையும் மாற்றி மாற்றி எடுப்பதற்காக ஒன்பது கதவுகளுடைய பெரிய பீப்பாயிலும். குதிரைகளின் பெயர்களையுடைய கடிதச்சுருள்கள் சிறிய பீப்பாயிலும் போடப்பட்டிருந்தன. இரண்டு சிறுவர்களால் முறையே ஒரு பீப்பாயிலிருந்து டிக்கட்டின் மறுபகுதியும் மற்றொன்றில் இருந்து குதிரையின் பெயரும் எடுக்கப்பட்டன. இவற்றின் விபரம் எல்லோருக்கும் கேட்கும்படியாக வாசிக்கப்பட்டு அவ்விடம் இருந்த மேற்பார்வையாளர்களாலும் குமாஸ்தாக்களாலும் குறித்துக்கொள்ளப்பட்டன. குதிரைகளும் அவற்றிற்கு டிக்கட்டுகளின் மறு பகுதிகளும் எடுத்தபின் பிரைஸ் விபரத்தில் கண்ட இதர ரொக்கப்பிரைஸ்களும் இதுபோலவே எடுக்கப்பட்டு எல்லா விபரங்களும் பொறுப்புள்ள அதிகாரிகளால் குறித்துக்கொள்ளப்பட்டன.

பிரைஸ் லிஸ்டு ஒவ்வொரு சந்தாதாரருக்கும் நேராக அனுப்பப்படுகிறது.

ம்யூட்சுவல் கிளப்பை அவர்களுடைய பூரண ஏற்பாட்டிற்கும் நேர்மைக்கும் பாராட்டவேண்டும். இதுபோன்ற காரியத்துக்கு வேண்டிய ஆதாரவும் நிர்வாகமும் தகுந்த அளவு இருக்கிறது.

(ஒப்பம்) G FEGER.
லீச்டென்ஸ்டன் (ஐரோப்பா) 1928 ஜூன் 14.

பிரபல பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

ஈவினிங் நியூஸ்.

லண்டன் செவ்வாய்:- 18—3—1930.

லண்டன் பட்டணத்தில் அதிர்ஷ்டப்பெண்.
தன்னுடைய வேலையைவிட்டு வெற்றிகாணச்சென்றாள்.
9,000 பவுனுடன் ஒரு புருஷன்.

அடியிற்கண்டது லண்டன்மா நகரைச்சேர்ந்த கிளாப்பம் ஹாமன் தெற்கு பாகத்தில் வசிக்கும் 'மிஸ் ரோசினா கத்திலீடவுட்' என்ற அதிர்ஷ்டப்பெண்ணின் சரித்திரம்:-

சுமார் 3-வருடத்திற்கு முன் லண்டனில் மேற்கண்ட மாது வேலைக்காரியாக விருந்தாள். பிறகு உலகத்தைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடன் தன் வேலையை விட்டு தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றாள். செல்லும்போது கையில் 50-பவுன் மூதலுடன் சென்றாள். சென்றதும் அங்கு ஓர் வேலை கிடைத்தது. பிறகு அங்கு வசிக்கும்போது ருடீசியா தேசத்தில் சாலிஸ்பரி பட்டணத்தில் வசிக்கும் ஓர் கணக்குவேலை பார்ப்பவர்மீது காதல்கொண்டு அவரை மணக்க நிச்சயித்தாள். மணம் செய்து கொள்வதற்கு முன் பெற்றோர்களைப் பார்த்துவர லண்டன் திரும்பினாள். அப்போது அவள் கையிலோ 3 பவுன் தானிருந்தது. ஆனால் கப்பலை விட்டிறங்கியவுடன் ஓர் அதிர்ஷ்டம் எதிர்பார்த்தவண்ணமாய் யிருந்தது. எப்படி யென்றால் ஆப்பிரிக்காவிலிருக்கும்போது மியூட்சுவல் கிளப் லிமிடெட் "மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப்" குதிரைப்பந்தய லாட்டரியில் ஓர் டிக்கட் வாங்கியிருந்தாள். அந்த டிக்கட்டிற்கு முதல் பிரைஸ் கிடைத்து 9 000-பவுன் தனக்கு கிடைக்கப்போகும் விஷயத்தை அறிந்து மகிழ்ச்சியடைந்தாள். அவளை மணக்கப்போகும் புருஷனும் அதிர்ஷ்டசாலிதான். அவர்தான் டிக்கட் வாங்கிக்கொடுத்தவர். அவர் வாங்கிக்கொடுத்த டிக்கட் முதல் பிரைஸ் வந்ததால் அவருக்கும் 800-பவுன் கிடைத்தது. பிறகு மிஸ். டவுட் கல்யாணம் செய்துகொண்டு ஐரோப்பா கண்டம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்ய எத்தனித்து விட்டாள். அவள் புருஷனும், இங்கிலாந்து தேசத்தையே கண்டிராதவராதலினால் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்பியைக்காண ஆவலாயினார்.

அதிர்ஷ்டமனிதனின் ஆனந்தம்!

ஜமேக்காடைம்ஸ்:— ஏப்ரல் 4—1931

கிரேண்ட் நேஷனல் குதிரைப்பந்தய லாட்டரியில் ஜமேக்கா தேசவாசி முதல் பிரைஸ் டிக்கட்டைப் பெற்றான்.

கைஸ்ஹில்லில் வசிக்கும் C. A. டெய்லருக்குக் கிடைத்தது முதல் பிரைஸ் பவுன் 6,800.

(வெஸ்ட் இந்தியா தந்தி)

L. C D. ஜமேக்காடைம்ஸ் கிங்ஸ்டன் மியூட்சுவல் கிளப் கிரேண்ட் நேஷனல் டிஸ்ட்ரிபியூஷனில் முதல் பிரைஸ் 6800 பவுனை ஜமேக்காவைச் சேர்ந்த கைஸிலிருக்கும் C. A. டைலர் பெற்றார்—மியூட்சுவல்

சென்ற சனிக்கிழமை சாரலஸ் A டெய்லர் லீச்டென்ஸ்டனிலிருக்கும் மியூட்சுவல்கிளப் லிமிடெட்டாரால் நடைபெற்ற கிரேண்ட் நேஷனல் குதிரைப்பந்தய லாட்டரியில் 6800 பவுன் ஜெயித்துவிட்டாரென்ற தந்திவந்தவுடன் கைஸ்ஹில்லைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் ஓர் ஆச்சரியமான குழப்பம் உண்டாயிற்று. டெய்லருக்கு தந்தி வந்தகாலத்திலேயே நமது ஜமேக்காடைம்சுக்கும் ஓர் தந்தி வந்தது. பத்திரிகை ரிப்போர்ட்டர்கள் அவரை உடனே கண்டு விசாரித்ததில் "நான் டிக்கட்டுகள் வாங்கி வாங்கி சலித்துப்போய்விட்டேன். இந்த டிக்கட்டு வாங்கும்போதும் இதுவே கடைசி முறை என்று சொல்லியும் வாங்கினேன்" என்று சொன்னாராம். இப்படியாக டெய்லர் டிக்கட்டிற்காக 6 ஷில்லிங் செலவழித்து 6800 பவுன் பெற்றார். அந்த டிக்கட்டை விற்றவருக்கும் பயனில்லாமல் போகவில்லை. அவருக்கும் 580 பவுன் கிடைத்தது.

நியூயார்க் ஈவினிங் வொர்ல்ட்.

நியூயார்க் ஆகஸ்ட் 21—1930

ம்யூட்சுவல் கிளப் லிமிடெட்டானது சில வருஷங்களாக நடைபெற்றுவரும் ஓர் நல்ல பெயர்பெற்ற கம்பெனியாகும் லீச்டென்ஸ்டன் கம்பெனியில் பிரைஸ் தொகைகளை சரியாக கொடுத்துவருகிறார்கள்.

டிக்கட் பெற்றுக்கொள்ளும் கடைசி தேதி 10-2-32 ஆனதால் டிக்கட்டிற்கு உடனே முந்துங்கள்! முந்துங்கள்!!

ஒவ்வொரு ஊரிலும் செல்வாக்குள்ள சப் ஏஜண்டுகள் உடனே தேவை.

அதிகாரம்பெற்ற ஏஜண்ட்:—

S. K. வரதாராஜலு, ஆனந்த நிலயம், திருச்செங்கோடு, S. I.

1929-ல் "செமினெட் லீகர்" பிரைஸ் சீட்டில் இந்தியாவில் "நீசாபட்டணம் கே. வீ. ஜோயானாராயணன்" என்பவருக்கு 1வது பிரைஸ் 2500 கிடைத்திருக்கிறது.

குண்டு. இந்தக் கடனில் மிகுதியும் அகாலமானவைகளால் நேரிடும் சாவு, பால், கருமாதி திதி முதலிய செலவுக்காகப்பட்ட கடன்களென அறிக. நமது மதங்கள் நாம் செத்தும் நமது சாகாதவர்களை விடப்போவதில்லை. பலவித செலவுகளில் அவர்களை உட்படுத்தி அனுதினமாகக் கொண்டு வருகின்றன.

மதங்களுக்காக நாட்டிலுள்ள கோவில்கள், விக்கிரகங்கள், மாதா கோவில்கள், மசூதிகள் எத்தனை? இவ்வளவும் வியர்த்தமாயின்--அதற்கென்ன சந்தேகம்--எவ்வளவு பொருளும், தொழிலும் வியர்த்தமாயினவெனப்பாருங்கள். நமது காங்கிரஸ்காரர்கள் கராச்சி திட்டத்தில் இந்த வியர்த்தங்களைத் தற்காப்புச்செய்ய உறுதிகூறி இருக்கின்றார்கள். இதுதான் பிரபல மத நடுநிலைமை எனக்கூறும் தந்திரம். அவரவர் மதங்களை அவரவர்கள் அனுஷ்டித்துவர அவரவர்களைக் காக்கப்படுமாம். ஆனால் அந்த கற்பனைகளால் விளையும் கொலைக்கும், கெடுதிக்கும் கணக்கு வழக்கில்லையாம். உலக முழுமையும் இந்த மத நடுநிலைமை என்ற திட்டம் விளைவிக்கும் கெடுதிகள் எண்ணத்தொலையாது. இருந்தும் நமது காங்கிரஸ் இந்த ஆபாச திட்டத்தை ஆதரித்து வருகின்றது. நமது காங்கிரஸ்காரர்களும் உலக மாதாபிமானிகளுடன் சேர்ந்த கோஷ்டியாராதலால் மூடமக்களை மூடத்தனத்தால் கொண்டுவர இதையோர் சூழ்ச்சியாக வைத்துள்ளார்கள். இந்த அகீர்த்தியடைந்த 'மதநடுநிலைமை' திட்டத்தின் கெடுதிகள் இனிவரும் 'சுயராஜ்யம் யாருக்கு' என்ற புத்தகத்தில் இரண்டாம் பாகத்தில் வரைந்துள்ளோம். அதனை வாசித்தறிவீர்களாக அரசியல் சூழ்ச்சிகளில் மதநடுநிலைமைத்திட்டம் ஒன்று இத்தியாதி சூழ்ச்சிகளால் உலக பாமரமக்கள் மயங்கி வருகின்றார்கள். அந்த மயக்கத்தைப் போக்கி அவர்கட்கு மெஞ்ஞான வழியைக்காட்டுவது உங்களுடைய கடமையாகும்.

மத சூழ்ச்சிகளிலிருந்து விடுபட்டும், ஜாதிவேற்றுமையை விலக்கி வழிபட்டும் பொருளாதார வித்தியாசத்தைப்போக்காவிடில் நமது பாமர மக்களின் தரித்திரமொழியா. கொடிது, கொடிது, வறுமை கொடிது' என்றார் நமது பெரியோர். உலகில் உடையவர்கள் சிலரே. ஆனால் இல்லாதவர்கள் பலர். இவர்களுக்குள்ள வித்தியாசங்களை ஆயிர வருஷங்களாக நமது மதங்களும் ஜாதி வித்தியாசங்களும் வளர்த்து வருகின்றன. இவை இரண்டின் உதவியால் சிலரே எல்லா உலகப்பொருள்களைக்கைக் கொண்டு மற்றகோடான கோடி மாந்தரை கை, காலுடன் விட்டுவிட்டிருக்கின்றார்கள். இந்த வித்தியாசத்தைப் போக்கவும் நீங்கள் முதலில் பாடுபடவேண்டும். உங்கள் சிறுவர்களில் வக்கீல்களாகி பணம் சம்பாதிக்க ஆசையிருக்கலாம். ஹைகோர்ட்டு ஜட்ஜிகளாகி திரவியம் குவிக்க ஆசைப்படலாம். வர்த்தகம், வைத்தியம், பாங்கிகள், நிலச்சொந்தக்காரர் முதலிய பணக்காரர்கட்குத் தொழிலைப்புரிய ஆசையிருக்கலாம், ஆனால் நீங்கள் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் தேசம், மதங்களாலும், சாதிகளாலும் பாழடைந்து வருவதுபோல் நீங்கள் சம்பாதிக்கும் செல்வமும் பாழாகுமென அறிக. பணம் ஒரு பக்கம் சேரச்சேர மற்றோர்பக்கம் வறுமையுயர்ந்தேவரும். உதாரணம் வேண்டுமானால் இன்று உலக நெருக்கடியைப் பாருங்கள். உலகில் இரண்டு தேசங்கள் அமெரிக்கா, பிரான்சு இவைகள் உலக செல்வத்தைக்குவித்து வைத்துக்கொண்டிருக்கின்றன மற்ற தேசங்களும் வல்லரசுகளும் தரித்திரத்தில் மூழ்கி தப்பித்துக் கொள்ள வகையறியாது விழி விழியென்று விழித்துக்கொண்டிருக்கின்றன. மேற்கூறிய இரண்டு நாடுகள் குவித்துக்கொண்டிருக்கும் செல்வம் எது? உலக வக்கீல்களும், ஜட்ஜிகளும், பாங்கர்களும், வர்த்தகர்களும், நிலச்சுவான்தார்களும், வட்டி வாங்குகின்றவர்களும், வீட்டு சொந்தக்காரர்களும், ஏழைமக்களை வருத்தி சேர்த்துவைத்த செல்வமென அறிக உங்கள் கடமை ஒன்றுளது. இந்தப் பொருளாதார நிலைமையை நன்கு படித்து அறியவேண்டும். நீங்கள் வாழும் வாழ்க்கையைச் சிக்கனமாகச் செய்து கொள்ளவேண்டும். வீண் விஷயத்தில் செலவு செய்யக்கூடாது உங்களுடைய செல்வம் நீங்கள்தான் சம்பாத்யம் செய்ததாக வேண்டாம் அது பெரியதவறு. நமது செல்வமனைத்தும் நாம் வாழும் வீடுகளையும் நாம் ஏறும் வண்டிகளையும், நாம் உண்ணும் உணவுகளையும், ரயில்களையும், கப்பல்களையும், பாங்கிகட்டடங்களையும், கோவில்களையும் குளங்களையும், கட்டின தொழிலாளர் மூலமாக வந்த செல்வமென்று அறிக இவர்கள் அறியாமையால் எல்லாவற்றையும், நம்மிடம் ஒப்படைத்து விட்டுத் தாங்களும், தங்கள் மக்களும் அளித்த வாழ்வைப் பூண்டொழுகலாயினர். ஆனால் அவர்கள் விழித்துப் பார்க்குங்கால் நமது செல்வங்கள் என்னாவதென்கிறீர்கள்? இந்த விபத்தைக்குறிக்க இனிமையான கதை ஒன்றுண்டு. ரஷிய நாட்டில் ஓர் வேதாளம் இருந்ததாம். அதன் பெயர் வீயாம். அதன் கண்கள் இரண்டு ரப்பைகளால் மூடப்பட்டிருந்தனவாம். அதற்கு அதனால் முன்னின்றவர்களைப்பார்க்க முடியாமலிருந்ததாம். ஆனால் எல்லா வேலையையும் தானே செய்து கொண்டிருந்ததாம். ரயில் ஓட்டியும், கப்பல் நடத்தியும், மில்களில் வேலை செய்தும் துணி துவைப்பதும், வீதிகளையும் மாளிகைகளையும் கூட்டியும், உழுது பயிரிட்டும், சில சோம்பேரிகட்கு இப்படிப்பட்ட சேவை செய்து வந்ததாம். இவ்வளவு உபகாரமாயிருந்தும் தனக்கு உண்ண உணவும், இருக்க வீடும், படுக்க பாயும் இல்லையாம். கடந்த ஆயிரம் வருஷங்களாக இந்த கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு, உடலையும், உயிரையும் சேர்த்துக் கட்டிப்பிடித்து வைத்திருக்குங்காலில் பத்து வருஷங்கட்கு முன் இரண்டு பெரியோர் அந்த நாட்டில் தோன்றி அந்த வேதாளத்தின் இரண்டு ரப்பைகளைத் தூக்கிவிட்ட மாத்திரத்தில் அதற்கு எதிரிலுள்ள வைகளையும், அதற்கப்பாலுள்ள வைகளையும், அதன் நாட்டினுட்பாலுள்ள வைகளையும், நாட்டுக்கப்பாலுள்ள வைகளையும், கடலுக்கப்பாலுள்ள வைகளையும், மலைக்கப்பாலுள்ள வைகளையும், கண்களால் பார்த்ததாம். "ஆ! ஆ! நம்மாலல்லவா இந்த உலக சுகபோகங்கள் ஆக்கப்பட்டுள்ள நமக்கு வாய்த்துள்ள கதி இது தானோ" என்று தன்னுடைய தேகத்தைக் குலுக்கியதாம். அந்தோ! சக்கிரவர்த்தியாரும், அவர் கோஷ்டியாரும் ரயில்சொந்தக்காரர்களும், மில்சொந்தக்காரர்களும், கப்பல் சொந்தக்காரர்களும், நிலச்சொந்தக்காரர்களும் வீட்டுசொந்தக்காரர்களும், மற்றுமுள்ள தனவந்தர், லாயர், ஹைகோர்ட்டு ஜட்ஜிகளும் இருந்த விடம் தெரியாமல் மறைந்து விட்டார்களாம். இந்தக் கதையில் கண்ட வேதாளங்கள் உலகில் கோடான கோடி மெலிந்து கிடக்கின்றன. இதை நீங்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

நமது 35 கோடி மக்களும், உண்டு, உடுத்தி நன்றாய் வாழ எல்லா அனுகூலங்களும் நமது நாட்டில் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. அவைகளை நல்வினியோகப் படுத்தும் பட்சத்தில் யாருக்கும் வறுமை என்பதும், இல்லாமை என்பதும், அறியாமை என்பதும் இருந்து வரும்? யாவரையும் உண்பிக்கத்தான்யமாயில்லை? யாவரையும் உடுப்பிக்கப் பஞ்சா இல்லை? யாவரையும் தங்க வைக்க வீடு கட்ட கல்லும் மண்ணுமா இல்லை? யாவரையும் படிப்பிக்கப் புஸ்தகங்களும், உபாத்தியாயர்களுமா இல்லை? எல்லாம் இருந்தும் உலக மக்களில் பெரும்பான்மையோரும், நமது நாட்டில் 30 கோடியும் பகல் பட்டினி, இராப்பட்டினியாயிருந்து வருவானேன்? இதற்கு ஒரே விடைதான் உளது. அதாவது உலகப் பொருள்களும், நமது நாட்டில் உண்டாகும் பொருள்களும் துர்வினியோகத்தினால் வரும் கேடென அறிக. இதைப் போக்கும் மார்க்கத்தினை சுருக்கமாக உங்கள் வாரப்பத்திரிகையாகிய குடிஅரசில் சுயமரியாதைத் தோழர்களுக்கு விண்ணப்பத்தில் கண்டுள்ளேன். அதனை வாசித்தறிவீர்களாக.

கடைசியில் உங்களைக் கேட்டுக்கொள்வதென்னவெனில் வியர்த்தத்தில் உங்கள் சக்தியைச்செலுத்த வேண்டாம். வீண் ஆடம்பரங்களில் காலங்கழிக்க வேண்டாம். நேற்றைய காங்கிரஸ் மண்டபத்தில் சுதேசிக்கண்காட்சியைப்போய்ப் பார்த்தேன். என்ன வியர்த்தம்! ஏறக்குறைய முழுமையும் ஏழைகட்குதவாப்பண்ட காட்சியாகவே இருக்கின்றன. பட்டாடைகளும் சரிகை ஆடைகளும், கம்பளங்களும், வெள்ளிச்சாமான்களும், மயிலெண்ணெய் போன்ற மருந்துகளும், சோப்புகளும், கதரும், புதிய சர்க்காக்களும் நிறைந்துள்ளன. இவையாருக்கு வேண்டும்? அங்கு வந்தவர்கள் யார்? துப்பட்டாக்களும் பட்டும் பட்டாடை அணிந்தோரும்மிகுதியும் காணப்பட்டார்கள். எந்தப் பறைச்சேரியிலிருந்தும், உப்பரபாளையத்திலிருந்தும், மீன்பிடிக்கும் குப்பங்களிலிருந்தும் மற்றுமுள்ள தொழில் இடங்களிலிருந்தும் யாரையும் காணோம். தரித்திரநாராயணனுக்கென கட்டியுள்ள சுயராஜ்ய மண்டபத்தில் காணும் காட்சி அனுதினமும் திரு. காந்தியார் வணங்கும் அவர் கடவுளுக்கே வெறுக்கத்தக்கவைகளெனக் காணப்பட்டன. இதைவிட ஏழை மக்கள் குடிசைகளையும், அவர்கள் பானை சட்டிகளையும் அவர்களின் பாலில்லாக் குழந்தைகளையும், தாய்மார்களையும், அவர்கள் படுக்கும்பாயும்தலையணையும் கண்காட்சியாகக் காட்டினாலும் உலகத்தின் உண்மை நிலைமையைச் சித்திப்பதற்கு அனுகூலமாகும். ஆதலின் வியர்த்தமான காரியங்களில் தலையிட வேண்டாமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். உலக உபகார வேலை வேண்டுமானால் உங்களுக்கு அபரிமிதமாக இருக்கின்றன. பறைச்சேரிகளென்ன? மீன் பிடிக்கும் குப்பங்களென்ன? போகிபாளையங்களென்ன? நோயால் வருந்தும் மனிதர்களென்ன? நாகதாளி, முள், காடு கரம்பு நிறைந்துள்ள கிராமங்களென்ன? நிலங்களென்ன? இருளடைந்துள்ள கிராமங்களில் வெளிச்சத்தைக் கொண்டு போக வேண்டுமானால் லட்சம் சிறுவர்கட்கு வேண்டிய உபகார வேலை இருந்து வருகிறது. ஆதலின் உங்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்து முன் ஒழுங்குபடுத்திக்கொள்ளுங்கள் என்று கூறுவோம். நம்முடைய நட்டைத்துக்கத்தினின்றுமீட்கவெத்தனித்து வரும்பல உபகார ஸ்தாபனங்களைவென்றதனால் உங்கள் சுயமரியாதைக் கூட்டத்தின் வேலை முடிந்ததாக எண்ணவேண்டாம். ஸ்தாபனங்களின் பிற்போக்கு மனப்பான்மையைக் கண்டு பிடியுங்கள். உங்கள் இயக்கம் வெற்றி பெற வேண்டுமானால் மற்ற இயக்கங்களுக்கு மேலான வழியைக் கைப்பிடித்து ஒழுகுங்கள். "உலகில் சுயராஜ்யம் வேண்டாத பித்தன் ஒருவனுமில்லை. ஆனால் சுயமரியாதை சுயராஜ்யமென்பதுதான் நிச்சயப்படவேண்டும்."

உலகில்உய்வதற்கு அடிப்படையாகவுள்ளது பகுத்தறிவும் மனப்பான்மையைப்பாமர மக்களுக்குள் பரவச்செய்தலென அறிக. உங்கள் கட்சிப்பெரியார் பகுத்தறிவை உங்கள் இயக்கத்திற்கு ஆதாரமெனக்கூறினார். அந்த பகுத்தறிவை உபயோகிப்பீர்களானால் சமதர்மமே அதாவது:- மதமற்ற-ஜாதி வேற்றுமையற்ற-பொருளாதார வேற்றுமையற்ற தருமமே நமது நாட்டையும் மற்ற நாடுகளையும் காப்பாற்றவல்ல இயக்கமாகும். இந்த இயக்கத்தைச்சான்றோர்களைக் கொண்டு நன்றாய்த் தெரிந்து

கொள்ளுங்கள். அதனைப் பரவச்செய்ய வேண்டிய தொழில் முறைகளை அறியுங்கள். தோழர்களே! ஒன்று சேருங்கள்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பலமடங்கு பிரமாண்டமான யந்திரங்களும், மின்சார வாகனங்களும், இருக்கின்றன. ஆனால் அவைகள் குங்குமம் இல்லாமலேதான் இதுவரையிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்னும் திருப்பதிக்குப்போய் நமது தலைமயிரை சாமிக்கு பரிசளிப்பதற்காக குடை உண்டியல் தட்டு பிச்சை மேள வாத்தியம், அங்கபிரதட்சணம், கோவிந்தா சத்தம், மஞ்சள் துணி வேஷம், திருநாமம் டிரேட்மார்க் முதலிய குண்டு தளவாடங்களோடு மானங்கெட்டு பிறமதஸ்தன் பரிகசிப்பான் என்ற வெட்கமும் இன்றி வீதி வீதியாய் பாட்டுப்பாடி அலைந்து திரியும் அநாகரீகக்காட்சியையும் வெகு தீவிரமாக இச்சென்னையில்தான் கண்டோம். இதில் படிப்பாளிகள் என்று சொல்லப்படும் யூனிவர்சிடி பட்டம்பெற்ற மந்திரிகள் கூட முக்கிய பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்களென்றால் இச்சென்னை நகரைவிட பகுத்தறிவற்ற எந்த ஒரு நகரோ அல்லது கிராமமோ இவ்வுலகத்திலேயே இருக்க முடியாதென்பதை நான் முக்காலும் சொல்லுவேன். இதற்கு பல்லாயிரக்கணக்கான உதாரணங்கள் கூறமுடியும், விரிவஞ்சி விடுக்கின்றேன்.

நமது இயக்கம்.

நமது இயக்கமானது பகுத்தறிவையொட்டி ஏற்படுத்தப்பட்டதாகும். இது எவ்விதத்திலும் ஒரு நூதனமான இயக்கமென்று சொல்லமுடியாது. இவ்வியக்கத்தின் கொள்கைகள் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் கூட பல நூறுவருஷங்களாக பல பெரியோர்களால் சொல்லப்பட்டவைகளேயாகும். ஆனால் அக்கொள்கைகளெல்லாம் இதுவரையில் ஏன் பரவுவதற்கு மார்க்கமில்லாமல் போயினவென்றால் அந்தக்காலங்களிலிருந்த அரசர்களேகாரணமாகும். பகுத்தறிவுக்கொள்கைகள் உயர்ந்த சாதியென்று சொல்லப்பட்ட ஒரு கூட்டத்தாருக்கு விரோதமாயிருந்தபடியாலும், அவ்வுயர்ந்த சாதியாரென்னும் பார்ப்பனர்கள் ஆதிக்கத்திலேயே முன்காலத்து பெரும்பாலான அரசர்கள் இருந்துவந்தமையாலும் இத்தகைய கொள்கைகள் பரவுவதற்கு இடமில்லாமல் அவ்வப்போது அமுக்கப்பட்டு இந்நாட்டில் பகுத்தறிவே பரவாமல் பெரும்பாலான மக்கள் ஒரு சிறு கூட்டத்தினருக்கு பல வழிகளிலும் அடிமைகளாகவே இருக்கும்படி நேர்ந்துவிட்டது. ஆனால் இன்றுவரையில் இப்பகுத்தறிவுக் கொள்கைகள் நாட்டில் சிறிதாவது பரவ இடமேற்பட்டிருக்கிறதென்றால் அதற்கு தற்கால அரசாங்கமே காரணம் என்பதை மிக அழுத்தமாக கூறுவோம். இவ்வுண்மையை நிரூபிப்பதற்கு பல்லாயிரக்கணக்கான உதாரணங்கள் கூறமுடியும்.

இனி, இக்கொள்கை இந்தியாவிற்கு மாத்திரம் புதிதாக ஏற்பட்டவைகளாவென்பதை யோசிப்போம். இக்கொள்கைகளில் சில கிரீஸ் தேசத்தில் பல நூறு வருஷங்களுக்கு முன்பு சாக்ரட்டீஸ் என்ற தத்துவ ஞானியால் போதிக்கப் பட்டவைகளாகும். அதற்கு பின் பல பெரியார்கள் அவ்வப்போது தங்கள் தங்கள் அறிவுக்கும், தைரியத்திற்கும் தக்கபடி சுயமரியாதைக்கொள்கைகளை அவரவர்களுடைய மக்களுக்கும் புகட்டி வந்தனர். ஆனால் இன்றோ வெளிநாடுகள் எல்லாவற்றிலும் இக்கொள்கையைப் பரப்புவதற்கான பல சங்கங்களும், பல பத்திரிகைகளும் நடைபெற்று வருகின்றன. ஆகவே நமது சுயமரியாதை இயக்கம் பெயரளவில் சாமான்யமாகத் தோன்றினாலும் கொள்கைகள் சம்மந்தப்பட்ட மட்டில் ஒன்றும் புதிதாகவோ ஆச்சரியமாகவோ, சொல்லவில்லை. ஆதலால் இக்கொள்கைகளைப்பற்றி பயப்படுகிறவர்களும் இவைகளை எதிர்க்கிறவர்களும் ஒன்று உலகப்போக்கை யறியாதவர்களாகவோ அல்லது கெட்ட எண்ணமுடையவர்களாகவோ தான் இருக்க முடியுமேதவிர வேறில்லை.

இயக்கக்கொள்கைகள்.

இனி நமது இயக்க கொள்கைகளைப்பற்றி நான் அதிகமாய் எடுத்துச்சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் தமிழ்நாடு முழுதும் நமது இயக்கம் நன்கு பரவியிருப்பதால் இதன் கொள்கைகளைப் பற்றி எதுவும் புதிதாகச்சொல்ல வேண்டுமென்று நான் கருதவில்லை. சுருக்கமாகக்கூறவேண்டுமானால் அரசியல், மதம், சமூகம் முதலியதுறைகளில் சகல மக்களுக்கும் சமத்துவம் ஏற்படுத்த வேண்டுமென்பதும், இவைகளிலுள்ள சூழ்ச்சிகளையும் புரட்டுகளையும் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்பதும், புராணம் கடவுள், ஜாதி முதலிய பெயர்களால் மக்கள் ஒருவருக்கொருவர் அடிமைப்பட்டுக் கிடக்கும் கொடுமையை ஒழிக்கவேண்டுமென்பதும் நமது கொள்கைகளின் முக்கிய அம்சங்களாகும்.

இதில் பெண்கள் விடுதலையை முதன்மையாக வைத்திருக்கிறோம். ஜாதிகளை வேரோடு அழித்து அவைகள் இருந்த இடத்தை நெருப்பிட்டுப்பொசுக்க வேண்டுமென்பதும், இவைகளுக்குக் காரணமாயிருக்கும் இந்து மதத்தை அடியோடு அழிக்க வேண்டுமென்பதும் எங்களுடைய அடிப்படையான கொள்கைகளாகும். இன்னும் இதர மதங்கள் கூட மனிதனுடைய பகுத்தறிவிற்கும், முன்னேற்றத்திற்கும் தடையாயிருப்பதால் அவைகளையும் அழித்தொழிக்கவேண்டுமென்பதும் எங்களது முதற்கடமையாகும். இதேமாதிரி கடவுள் உணர்ச்சி என்பது சிறுபிள்ளைகளுக்கு நாம் "பூச்சாண்டி" என்று சொல்லும் ஒரு அர்த்தமற்ற வார்த்தையைப் போன்றதைத் தவிர வேறு அதற்கு தத்துவார்த்தமோ, விசேடார்த்தமோ சொல்வதால் மனிதனுக்கு தன்னம்பிக்கையும், தன் முயற்சியும் இல்லாமல் போவதால் அவ்விதக்கடவுள் உணர்ச்சியும் அடியோடு தொலைக்க வேண்டுமென்று சொல்கிறோம். இந்தக்கொள்கைகளுக்கு விரோதமாக எந்த மகாத்மாவோ, எந்த அவதார புருஷரோ இருந்தாலும், அவர்களுக்காக நாம் சிறிதுகூடப் பின் வாங்கப் போவதில்லை.

நமது இயக்கக்கொள்கைகளைப் பரப்புவதில் நாம் எந்த அரசியல் கட்சிகளுக்கும் அடங்கினவர்களல்ல. ஜஸ்டிஸ் கட்சியார்கள் நமது இயக்கத்தை ஜஸ்டிஸ் கட்சியின் ஒரு கிளை என்று சொல்கிறார்கள். சமீபத்தில்கூட சர். பாத்ரோ அவர்கள் இதே அபிப்பிராயத்தை இங்கிலாந்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறார். அதைப்பற்றி நமக்கு சந்தோஷந்தான் இதேமாதிரி காங்கிரஸ்காரர்களில் சிலர்கூட நமது இயக்கக் கொள்கைகள் காங்கிரசிலும் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதிலும் சந்தோஷந்தான். ஆனால், நாம் இருகட்சிகளிலும் சார்ந்தவர்களல்ல. நமது கொள்கைகள் இவ்விரு கட்சிகளிலும் எது வரையில் இருக்கின்றன வென்பதை நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். ஆகவே, நமது கொள்கைகளைப்பற்றி நான் தற்போது அதிகமாய்ச் சொல்ல முடியாவிட்டாலும் மகாநாட்டு நிகழ்ச்சிகளிலிருந்து விஸ்தாரமாகத் தெரிந்து கொள்ளலாம்.

சுயமரியாதையும் காங்கிரசும்.

இனி, நமது இயக்கத்திற்கும், காங்கிரசுக்கும் உள்ள பேதங்களைப்பற்றி சுருக்கமாகச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் என்பது தேசபக்தியை அடிப்படையாகக் கொண்டது. நமது இயக்கமோ பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டது. ஒன்று பக்தியின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. மற்றொன்று அறிவின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் வருணாசிரம தர்மத்தை நிலைநிறுத்தவும், இந்து மதத்தை ஆதரிக்கவும் ஏற்பட்டிருக்கிறது. நமது இயக்கமோ இவ்விரண்டையும் அழிக்க ஏற்பட்டிருக்கிறது. காங்கிரசும், அதன் சர்வாதிகாரியான காந்தியாரும் ராமராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். நாமோ "ராமன்" கதை ஒரு கட்டுக்கதையென்று நிரூபிக்கவும், அக்கட்டுக்கதையில் நடந்ததாகச் சொல்லப்படும் ராஜ்யமோ ஒரு அநீதியான கொடுங்கோல் ஆட்சியாகையால் அத்தகைய ஆட்சி கூடாதென்று தடுக்கவும் முயற்சிக்கிறோம். காங்கிரசோ தேசியபாஷை யென்று சொல்லப்படும் ஹிந்தியைக் கட்டாய பாஷையாக்க வேண்டுமென்கிறது. நாமோ உலக பாஷையாகிய ஆங்கிலத்தை கட்டாய பாஷையாக்கவேண்டுமென்கிறோம். காங்கிரசோ எல்லா மதங்களையும் காப்பாற்றுவதற்காக மதநடுநிலைமைவகிக்கவேண்டுமென்கிறது. நாமோ உலக மக்களையே ஒன்றுபடுத்துவதற்காக எல்லா மதங்களும் அடியோடு அழிக்கப்பட வேண்டுமென்கிறோம். காங்கிரசோ சிற்றரசர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் ஆதரவு அளிக்கிறது. நாமோ ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையே ஒழிய வேண்டுமென்கிறோம். காங்கிரசோ தீபாவளியில் நரகாசுரன் கதையை ஞாபகப்படுத்த வேண்டுமென்கிறது. நாமோ இம்மாதிரி அர்த்தமற்ற கட்டுக்கதைகளான ஆர்ப்பாட்டங்களெல்லாம் ஒழிய வேண்டுமென்கிறோம். காங்கிரசோ தக்ளியினால் நூல் நூற்க வேண்டுமென்கிறது. நாமோ அது காட்டுமிராண்டிகள் காலத்துவேலை; மிஷினால் நூற்கவேண்டுமென்கிறோம். காங்கிரசோ காந்தி ஜெயந்தி கொண்டாட வேண்டுமென்கிறது. நாமோ காந்தி ஜெயந்தி ஒழிவதோடு, கிருஷ்ண ஜெயந்தி,

அவன் அப்பன் ஜெயந்தி கூட ஒழிய வேண்டு மென்கிறோம். காங்கிரசோ ஆங்கிலேயரை அன்னியன் என்கிறது. நாமோ ஆங்கிலேயர் அன்னியரானால் அதற்கு முன்கிவந்த ஆரியப்பார்ப்பனரும் அன்னியர்தான்; விரட்டுவதாயிருந்தால் அவர்களை முதலில் விரட்ட வேண்டு மென்கிறோம். காங்கிரசோ எதற்கெடுத்தாலும் "கடவுள் செயல்" என்ற அடிமைப்புத்தியைப் புகட்டுகிறது. நாமோ எல்லாம் மனிதன் செயல் என்று கொள்ளவேண்டு மென்ற தன் முயற்சியைப் புகட்டுகிறோம். காங்கிரசோ கோயில்களை சீர்திருத்திப் பாதுகாக்க வேண்டுமென்கிறது. நாமோ புதிதாயிருக்கும் கோவில்களைத் தொழிற்சாலைகளாக்கி, பழைய கோவில்களை இடித்துத் தரை மட்டமாக்கி அவ்விடங்களில் இலவச ஆஸ்பத்திரிகள் கட்டவேண்டுமென்கிறோம். காங்கிரசோ சங்கராச்சாரிகள், மகந்துகள், ஜீயர்கள், மடாதிபதிகள், போப்புகள், பாதிரிகள், பக்கிரிகள், முல்லாக்கள், பிட்சுகள் முதலானவர்களைக் காப்பாற்றுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறது. நாமோ இவர்கள் எல்லாரிடமிருக்கும் சொத்துக்களை பொது ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு ஆளுக்கொரு கூடையும் மண்வெட்டியும் கொடுத்துத் துரத்தவேண்டுமென்கிறோம்.

ஆகவே காங்கிரசினுடைய கொள்கைக்கும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைக்கும் எந்த விதத்திலாவது சம்பந்த முண்டாவென்பதை நீங்களே சொல்லுங்கள். விஷயங்கள் இவ்வளவு வெட்டவெளிச்சமாயிருக்க, "இனிமேல்சுயமரியாதைக்கட்சி அவசியமில்லை,, யென்றும் "தேசிய சுயமரியாதை,, யென்றும் சொல்லித் திரிபவர்களெல்லாம் ஒன்று வயிற்றுப் பிழைப்புக் காரர்களாகவோ அல்லது வடிகட்டின அயோக்கிய சிகாமணிகளாவோ தான் இருக்கவேண்டுமென்பதை நான் துப்பாக்கி முனையில் நின்று கூடக் கூறுவதற்குத் தயாராயிருக்கிறேன்.

தோழர்களே! நான்சொல்லியவற்றுள் ஒன்றேனும் 'உலக சிரேஷ்டர்" சொன்னதாகவோ ரிஷிகள் சொன்னதாகவோ நான் சொல்லமாட்டேன் எனது சொந்த அறிவுக் குப்பட்டதையே சொல்லியுள்ளேன்.

இனிதாங்களெல்லோரும் இதா சொற்பொழிவுகளைக் கேட்பதோடு நான் ஏதேனும் சொல்ல வேண்டுமென்று விரும்பினால் எனதுமுடிவுரையில் சொல்லுகிறேன் என்பதை அறிவித்துக் கொண்டு மீண்டுமொருமுறை தங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் இதை முடிக்கிறேன்.

அறிவிப்பு.

சென்னைநகரம் முழுமைக்கும் நமது பத்திரிகையின் சோல் விளம்பர ஏஜண்டுகளாக மெஸர்ஸ் கற்பகம் கம்பெனியாரை நியமித்திருக்கிறோம். ஆகையால் இனி நமது பத்திரிகையில விளம்பரம் செய்யவிரும்பும் சென்னையிலுள்ளவர்கள் கீழ்க்கண்டவிலாசத்தார்மூலமாகவே விளம்பரத்திற்கு ஏற்பாடுசெய்துகொள்ளவும்:-

Messrs. Karpaham & Co.,
Sole Advertising Agents,
257, Linghi Chetty Street,
G. T. Madras.

பிள்ளையார் பறிபோனார்

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா தொம்பக்குளம் 26-12-31ல் சுமார் 4, 5 தினங்களுக்கு முன் இவ்வூர் தெப்பக்குளத்திற்குக் கீழ்ப்பக்கத்தின் உயரிய மேடைமீதுள்ள பிள்ளையார் விக்கிரகம் ஒன்றை இரவில் யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் நாளதுவரை ஒன்றும் புலன் தெரியவில்லை போனபிள்ளையாரும் திரும்பி வரவில்லை என்று தெரிகிறது என ஒருநிருபர் எழுதுகிறார்.

விளம்பரம்

ஈரோடு கிராமபஞ்சாயத்து கோர்ட்டு.

1931 ௵ சிவில் நெ. 584.

ஈரோடு பர்மா ஆயில் கம்பெனி ஏஜண்டு ரு. மீனாட்சிசுந்திரஞ் செட்டியார்—வாதி.

ஈரோடு டவுனிலிருக்கும் மோட்டார் டிரைவர் சி. வெங்கிட்டராமநாயுடு—பிரதிவாதி.

ஷை நெம்பரில் வாதி உம்மபேரில் பத்து வரவு கணக்குப்படி ரூ. 33-5-0 தாவா செய்திருக்கிறபடியாலும் நீர் ஷை சம்மனுக்கு கிடைக்காமல் தப்பித்துக் கொண்டிருப்பதாகத் தெரிவதாலும் ஷை நெம்பர் 11-1-1932-ல் வாய்தா போடப்பட்டிருப்பதாலும், ஷை வாய்தாதேதி பகல் 12-மணிக்கு நம்ம கோர்ட்டில் ஆஜராகி உம்முடையவாதத்தைத் தெரிவிக்காவிடில் எக்ஸ்பார்ட்டியாக ஒரு (தலைத்தீர்ப்பு) செய்யப்படுமென்ற விவரமறியவும்.

C. K. Chenniappah
President

ஈரோடு 29-12-1931.

ஆங்கிலேயர் அன்னியரென்றால் ஆரியப்பார்ப்பனர் யார்?

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India. Ltd., Bombay No. 10.

சுயமரியாதை

இயக்கப் பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ. ராமசாமி, 2. W. P. A. சௌந்திரபாண்டியர், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எல். ராமநாதன் 5. கைவல்ய சாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனார், 9. குருசாமி குஞ்சிதம், 10. லீலாவதிராமசுப்பிரமணியம் 11. சுலோசனா, பொன்னம்பலனார், 12. சிவானந்தம். ஆகியவர்களின் போட்டோ படங்கள் $6\frac{1}{2} \times 4\frac{3}{4}$ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகின்றவர்களுக்கு 100க்கு 6—4—0வீதம் கமிஷன்கழித்துக் கொடுக்கப்படும்.

தனி காப்பி வேண்டியவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாலு & Co., No. 3
ஒப்பணக்காரத்தெரு, ஈரோடு.

இல்வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க விரும்பினால் நமது

தங்கபஸ்பம் மனோரஞ்சித லேகியத்தில் சேர்த்துச்சாப்பிடுங்கள்.

தாது க்ஷீணத்தை நிவர்த்திக்கும். தாது விர்த்தியடையும். நீத்துப்போன இந்திரியத்தை இறுக்கி மணியாக்கிவிடும். அடங்காத ஆண்மை, வீரியம் உண்டாகும். சோம்பல், அசதி, சோர்வு நீங்கும். தேக பலம், தேஜஸ், அறிவு வளர்ச்சி, மனோ வலிமை உண்டாகும். 30 வேளை தங்க பஸ்பம் ரூ. 7. 30 வேளை லேகியம் ரூ. 3. வி. பி. செலவு வேறு. வெளிநாட்டார் ஆர்டருடன் ரூ. 5 முன்பணமனுப்பவும்.

குறிப்பு:— நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

S. ராஜகோபால் பிள்ளை, தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த போதினி" உதவி ஆசிரிடர் ஸ்ரீமதி அரங்கநாயகி, புதுவை பாரதி தாஸன், சிவப்பிரகாசம், கூத்தபெருமாள், டி. சுப்ரமணியம், Miss. மைக்கேல், T. K. நயினார் ரிடையர்ட் தாசில்தார், அவரது மனைவியார், திரு. முருகப்பா, T. V. சுப்ரமணியம், இருபுத்த சந்யாசிகள், திருவாரூர் பார்த்தசாரதி, ராமன், புருஷோத்தமன், துளசிங்கம் ஆகியவர்கள் குறிப்பிடக்கூடியவர்களாகும்.

மகாநாடு இரண்டு தினங்களிலும் தோழர் C. R. நாராயணசாமி B. A., அவர்கள் இனிமையான சுயமரியாதை கீதங்கள் பாடினார். இன்னும் N. B. காளியப்பன், முருகேசம் முதலிய பலதோழர்களும் அடிக்கடிபாடி மகிழ்வித்தனர். இரண்டு தினங்களிலும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. மகாநாட்டைத் தோழர் M. சிங்காரவேலு B A., B. L., அவர்கள் துவக்கினார். (சொற்பொழிவு வேறொரு பக்கம்) புரொபசர் லட்சுமி நரசு அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் அவசியத்தைப்பற்றியும், ஆத்மா என்ற மூடநம்பிக்கையைப்பற்றியும், 'மகாத்மா' என்னும் பெயர் ஆத்மா என்பதை நிலை நிறுத்த பார்ப்பனர்களால் உண்டாக்கப்படுகிற சூழ்ச்சியென்றும், ஆத்ம நம்பிக்கையொழிந்தாலொழிய மறுஜன்மம், கடவுள், புரோகிதம் முதலிய புரட்டு வார்த்தைகள் ஒழியமார்க்கமில்லையென்றும் சுமார் 1-மணி நேரம் வரையில் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். அதை தோழர் T. V. சுப்பிரமணியம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார். பிறகு தலைவர் தேர்தல் நடைபெற்றது. அதையொட்டிதோழர்கள் சுவராஜ் B A., B. L., M. L. C., K. V. அழகிரிசாமி, S. V. லிங்கம் முதலியவர்கள் பேசினார்கள். அதன் பிறகு மகாநாட்டுத்தலைவர் ஜோலார்ப்பேட்டை தோழர் V. பார்த்தசாரதியவர்கள் தனது சொற்பொழிவை நிகழ்த்தினார். (வேறொரு பக்கம்) மாலை 2-30 மணிக்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (பிறிதோரிடம்) இரவு 8-மணிவரையில் தீர்மானங்களை யொட்டிபலர் பேசியபின்பு தலைவர் முடிவுரை கூற மகாநாடு முடிவுற்றது.

மறுதினம்.

காலை 9 மணிக்குப் பெண்கள் மகாநாடு ஆரம்பமாயிற்று. மேடை முழுதும் பெண்களாலேயே நிரம்பியிருந்தனர். ஹால் முழுதும் ஜனங்கள் நிறைந்து உள்ளே நிற்கவும் இடமில்லாமல் வெளியே நின்றுகொண்டே பலர் கேட்கவேண்டியதாயிற்று. மகாநாடு சகோதரி கிரிஜாதேவியவர்களால் துவக்கப்பட்டது. (பிரசங்கம் அடுத்த வாரம் வரும்) சகோதரி குஞ்சிதம் B. A., அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றார்கள் (உபந்யாசம் அடுத்த வாரம் வெளிவரும்) பிறகு தலைவர் சகோதரி அன்னபூரணியவர்கள் தலைமை வகித்து தன்னுடைய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். (அடுத்த வாரம்) பிறகு தீர்மானங்களை யொட்டி பலர் பேசினார்கள். (விபரம் அடுத்த வாரம்) சகோதரிபங்காரு (12 வயது சிறுமி) அவர்கள் "பெண்களும் மூடப்பழக்கங்களும்" என்பது பற்றி ஒரு வியாசம் வாசித்தார்கள் (அடுத்த வாரம்)

பிறகு மாலை 3 மணிக்குத் தொண்டர்கள் மகாநாடு துவக்கியது. சகோதரி சகுந்தலா அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்று ஆங்கிலத்தில் ஒருசொற்பொழிவு நிகழ்த்தினார்கள். (அடுத்த வாரம்) பிறகு சகோதரி இந்திராணி பாலசுப்பிரமணியமவர்கள் தலைமை வகித்து சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் வரையில் பேசினார்கள். (அதன் சுருக்கம் பின்னர் வரும்) பிறகு தோழர்கள் விஸ்வநாதம் அவர்கள் "கிழக்கும் மேற்கும்" என்பதுபற்றியும், முருகப்பர் அவர்கள் "மதமும் மக்களும்" என்பது பற்றியும், பொன்னம்பலனார் அவர்கள் "சடங்குகள்" என்பதுபற்றியும், கே. வி. அழகர்சாமியவர்கள் "சுயமரியாதையும் காங்கிரசும்" என்பதுபற்றியும் இரவு 8 மணி வரையில் பிரசங்கங்கள் செய்தார்கள். பிரசங்கம் முடியும் வரையில் ஜனங்கள் அவ்வளவு பேரும் கொஞ்சங்கூட அசையாமல் இயக்கக்கொள்கைகள் தங்கள் நெஞ்சில் பதியும்படி உருக்கமாகவும் உணர்ச்சியோடும் கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. பொது மேடைகளில் பிரசாரம் செய்பவர்களில் சுயமரியாதைக்காரர்களுக்கு மிஞ்சியவர்கள் சென்னை நகரில் இதுவரையில் வந்ததில்லை யென்று பலரும் பேசிக்கொண்டு போனதில் சிறிதும் ஆச்சரியமில்லை கடைசியாக தோழர்கள் பொன்னம்பலனாரும், திருஞானசம்பந்தரும் வந்தனங்கூற மகாநாடு வெற்றிகரமாய் முடிந்தது.

இம்மகாநாடு கூடுவதற்கு முக்கிய காரணஸ்தர்களாக இருந்தவர்களில் புரொபசர் லட்சுமிநரசு, தோழர்கள் V. P. S. மணியார், திருஞானசம்பந்தம், ரத்தினசாமி, பண்டிட் ஆனந்தம், டி. சுப்பிரமணியம் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

(நமது நிருபர்)

காலண்டர் வரப்பெற்றோம்.

சென்னை எழும்பூர் கவர்ன்மெண்ட் கன்ட்ராக்டரும், குதிரைகளுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் தகுதியான கொழுமையை உண்டுபண்ணக்கூடிய ஆகார வியாபாரியுமான F. W. மேன்ஸ்பீல்டு அவர்களால் அனுப்பப்பட்ட 1932ம் வருட காலண்டர் வரப்பெற்றோம். அது பல வர்ணங்களோடு கண்களைக் கவரத்தக்க அழகிய படத்துடன் இருப்பதாகும்.

F. W. Mansfield,
Horse Food Specialist and
Government Contractor,
Egmore, Madras.

திண்டுக்கல் சண்முகம் தாஸ் டோர் சொந்தக்காரர் திரு. எ. எஸ். முருகேசம் அவர்களால் அனுப்பப்பட்ட 1932 வருடக் காலண்டர் வரப்பெற்றோம்.

அறிவிப்பு.

சேலம் "குடி அரசு" சந்தாநேயர்களுக்கு ஷை ஏஜண்டு வணக்கமாய்த் தெரியப்படுத்திக்கொள்வதென்னவென்றால்:— 1-1-32 தேதிக்குள் சந்தாதாரர்கள் பாக்கியைச்செலுத்திவிட வேணுமாயும், இனிமேல் புதிய சந்தாதாரர்கள் முன்பணம் கட்ட வேண்டும் என்றும், அறிவித்துக் கொள்ளுகிறேன். அன்றி அவ்வப்போது பணத்தை செலுத்திவிடவேண்டுகிறேன். தவறினால் பத்திரிகையைக் கண்டிப்பாய் நிறுத்த நேரிடுவதைக்குறித்து வருந்துகிறேன்.

A. M. B. "குடி அரசு"
ஏஜண்டு, சேலம்.

விளம்பரம்

கொளம்பில் கீழ்கண்டவிலாசத்தில் 'குடி அரசு' பதிப்பகபுஸ்தகங்களும் இதர சுயமரியாதை புஸ்தகங்களும் சு. ம. தலைவர்கள் போட்டோபேட்ஜ். குடிஅரசு. தமிழன். புதுவைமுரசு. குமரன். சண்டமாருதம், விடுதலை ஆகிய பத்திரிகைகளும் கிடைக்கப் பெறலாம்.

A. S. பரமசிவம்.
46. காலிரோட்,
பம்பலபிட்டி, கொளம்பு.

புதிய சந்தாதாரர்களுக்கு இனாம்!

"குடி அரசு"க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூபாயை மணியார்டர் செய்பவர்களுக்கு பத்திரிகையுடன் 0—8—0 அணாவிலையுள்ள குடி அரசு வெளியீட்டுப்புத்தகங்கள் இனாமாகக்கொடுக்கப்படும்.

வெளியிடுவோர் "குடி அரசு" ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட் ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

மணவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத்துணைக்கு ஒரு பெண் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:-வயது 55 ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பென்ஷன் மாத்திரம் மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர மற்றபடியான தகுந்த பெருமையும் சொத்தும் உடையவர். நல்லதிடசரீரமும் அழகிய தோற்றமும்உடையவர். நல்ல குணமும் ஒழுக்கமும் உடையவர்.

பெண்ணுக்கு இருக்கவேண்டிய யோக்கியதைகளாவன வயது 30 முதல் 40 க்குட்பட்டதாய் இருக்கவேண்டும். ஜாதி வேளாளர், நாயுடு, செட்டி, முதலியார், கவுண்டர், பிள்ளை ஆகிய ஜாதியார்களாய் இருந்தால் நலம். யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருந்தால் போதும். தன்மை விதவையானாலும் குற்றமில்லை. நல்ல சரீரக்கட்டுடன் வியாதியில்லாமல் இருத்தல்வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்துடன் தங்கள் உருவப்படத்துடன் எழுதுக. மலேயா

C/o "குடி அரசு" ஈரோடு.

நீங்கள்

கதரின் புரட்டை உணரவேண்டுமா?

அப்படியானால்

திரு. எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்.,
அவர்களால் தொகுக்கப்பட்ட

'கதர்-மூட நம்பிக்கை' என்னும்

ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதன் விலை அணா 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

லண்டன் மகாநாட்டுச் செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அன்பர் ஆகியோரின் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், சித்திரங்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி.யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக.

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

மறியலும், தேசியமும் எலக்ஷன் சூழ்ச்சி.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதாரர்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கவலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப்பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து கிகாற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்துதொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான—சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலைசிறந்ததாகும். இதன் விலை அணா 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணா 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.